


# தளபதி கிட்டு:


# ஒரு காலத்தின் பதிவு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

Liberation Tigers Of
TAMIL EELAM

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கிட்டு:
# ஒரு காலத்தின் பதிவு



இது,
தமிழீழ விடுதலைப்புலிகள்
வெளியீட்டுப்பிரிவின்
வெளியீடு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இப்பதிப்பு 1994 மாவீரர்நாளையொட்டி தமிழீழ விடுதலைப்புலிகளின் நோர்வேக் கிளையால் வெளியிடப்படுகிறது.


**கிட்டு: ஒரு காலத்தின் பதிவு**

| | | |
|---|---|---|
| **வெளியீடு** | - | வெளியீட்டுப்பிரிவு,<br>தமிழீழ விடுதலைப்புலிகள்,<br>தமிழீழம். |
| **முதற்பதிப்பு** | - | மாசி 1994 |
| **இரண்டாம்பதிப்பு** | - | கார்த்திகை 1994 |
| **அன்பளிப்பு** | - | ரூபா 60/- |



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நுழைவாயில்...

தமிழீழ தேசத்தின் முதுபெரும் தளபதியும், தலைவர் பிரபாகரனின் உற்ற தோழனுமான கேணல் கிட்டு அவர்களின் நினைவாக இந் நூல் வெளியிடப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் எமதியக்கத்தின் யாழ். மாவட்டத்தளபதியாகப் பணியாற்றி, அதனை எமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவந்ததன் மூலம் - விடுதலைப்போராட்டத்தில் முதற் தடவையாக எமக்கென ஒரு கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தை உருவாக்கிய தளபதி கிட்டு அவர்கள் பிற் காலத்தில் - எமது சர்வதேசச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

தமிழர் பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண, 'குவேக்கர்' என்ற சர்வதேச அமைப்பு முன்னெடுத்த சமரச முயற்சி தொடர்பாக, தலைவர் அவர்களுடன் கலந்து பேசி, சமாதான முயற்சியை வளர்த்துச் செல்ல

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தாயகம் நோக்கி வந்துகொண்டிருந்த தளபதி கிட்டு அவர்கள், உலகக் கடற்பரப்பில் வைத்து இந்திய நாசகாரிக் கப்பல்களினால் சுற்றி வளைக்கப்பட்டார்.

சரணடையுமாறு நிர்ப்பந்தித்த இந்தியாவின் மிரட்டலுக்கு அடிபணிய மறுத்த அந்த வீரன், தன்னோடு கூட வந்த இன்னும் ஒன்பது தோழர்களுடன் கப்பலைத் தகர்த்து வீரச்சாவை அணைத்துக் கொண்டார்.

தளபதி கிட்டுவைப் பற்றித் தலைவர் அவர்களிடமிருந்தும், கூட இருந்த தோழர்களிடம் இருந்தும் கட்டுரைகளாக, கவிதைகளாக, உரைகளாக, பாடல்களாக வெளிப்பாடுகண்ட உணர்வலைகளும், இயக்கத்தின் அதிகாரபூர்வக் குரல்களாக வெளியிடப்பட்ட அறிக்கைகளும், சிறப்புக் கட்டுரைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

தளபதி கிட்டு அவர்களைப் பரிபூரணமாக உங்கள் கைகளில் தரக்கூடிய முழுமை பெற்ற ஒரு வடிவமாக இதைக் கொள்ள முடியாது என்பது உண்மைதான். ஆனாலும், பல தோழர்கள் அவரைப்பற்றி வெளிப்படுத்திய உள்ளத்து உணர்வுகள் இங்கே சங்கமித்துள்ளன.

இத் தொகுப்பு நூலை வெளியிடுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

***புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்***

*வெளியீட்டுப் பிரிவு,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்.*

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# முதுபெரும் தளபதி கேணல் கிட்டு அவர்களின் நினைவாக தலைவர் அவர்கள் விடுத்த இரங்கற் செய்தி



மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம்; அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அருமைத்தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு; அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

கிட்டு, நீ சாகவில்லை;<br>ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!

Tamileelam Archive



*தலைமைச் செயலகம்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*தமிழீழம்*
*17.01.1993*

# இந்திய அரசே பொறுப்பு

எமது மூத்த தளபதியும், எமது இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், சர்வதேச தலைமைச் செயலகத்தின் பொறுப்பாளருமான கேணல் கிட்டுவையும், மற்றும் ஒன்பது போராளிகளையும் மரணப் பொறிக்குள் தள்ளி அவர்களை அழித்தமைக்கு இந்திய அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இந்திய அரசின் இந்த வஞ்சகச் செயல் தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர இயக்கத்திற்கு இழைக்கப்பட்ட இன்னுமொரு மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். இது இந்தியாவின் இரத்தக்கறை படிந்த ஆதிக்க அரசியலுக்கு மேலும் இழுக்கைத் தேடிக் கொடுத்துள்ளது. தமிழீழ மக்கள் மீதான இனப் படுகொலைக்கு இந்தியா கைகொடுத்து உதவுகின்றது என்பதை இச்செயல் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிடும் நோக்கிலும், தென்னாசியப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் இலக்கிலும் இந்திய அரசு நீண்ட காலமாகவே தமிழர் பிரச்சினையில் தலையிட்டு வருகின்றது. நண்பனாக நடித்துத் துரோகங்களை இழைத்துவருகின்றது. சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழரின் விடுதலை இயக்கமாகிய புலிகள் இயக்கத்தை ஒழித்துக்கட்ட முயன்றுவருகின்றது. தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கும் முட்டுக்கட்டையாக இருந்துவருகிறது.

நாம் ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள் இனம் என்பதையும், இன அழிவுக்கெதிராக நீதியின் அடிப்படையில் உரிமைப்போர் நடத்தி வருகிறோம் என்பதையும் அலட்சியம் செய்து வரும் இந்திய அரசு, எமது மக்களின் சாவிலும் அழிவிலும் தனது பூகோள ஆதிக்க அரசியலை முன்னெடுக்க முயல்கிறது. சிறிய தேசிய இனமாகத் தனித்து நின்று போராடி, உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக்குரலையும் இந்தியா நசுக்கிவிட முயல்கிறது. தமிழீழக் கடற்பரப்பை முற்றுகையிட்டுத் தமிழ் நாட்டுடன் எமது தொடர்புகளைத் துண்டித்து, எமது கடற்போக்குவரத்தைத் தடைசெய்து எம்மைப் பலவீனப்படுத்தி, எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களைக் கொன்றழிப்பதற்கு இந்தியா துணை போகின்றது.

இந்தியாவின் சதிவலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவிடம் தர்மம் கேட்ட திலீபன், இந்திய மத்தியத்துவத்தை நம்பிய புலேந்திரன் - குமரப்பா, இந்தியாவிலிருந்து சமாதானத்தூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப்பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கிய திட்டத்துடன், சமாதானத் தூதுவனாகவே தளபதி கிட்டு தமிழீழம் நோக்கிய கடற்பயணத்தை மேற்கொண்டார். வேறெந்தப் போக்குவரத்துப் பாதைகளும் இல்லாததால், சகலரும் சுதந்திரமாக நடமாடும் சர்வதேச கடல்

மார்க்கமாக அவர் தமது தாயகம் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தார். இந்தியக் கடற்படை கிட்டுவின் கப்பலை இடைமறித்தபோது, கிட்டுவின் சமாதான முயற்சி பற்றி இந்திய அரசிடம் கூறப்பட்டது. ஆனால் இந்திய அரசு ஐரோப்பிய சமாதான முயற்சியை விரும்பவில்லை. மேற்குலக மத்தியத்துவம் மூலம் தமிழர் பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு ஏற்படு வதை விரும்பவில்லை. அத்துடன் தனது கடலாதிக்கப் பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்துவிடவே இந்தியா விரும்பியது; இதனால் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்குப் பலியாக நேர்ந்தது.

தளபதி கிட்டுவும் ஏனைய புலிவீரர்களும் இந்தியாவின் படைபலத் துக்கும் பயமுறுத்தலுக்கும் தலைகுனியவில்லை. எமது இயக்கத்தின் வீரமரபுக்கு ஒப்பத் தம்மைத் தாமே அழித்து, தமிழினத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தினர்.

இந்தத் தியாக வரலாற்றுநிகழ்வு இந்திய அரசின் அரக்கத்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

***"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"***

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# இந்திய அரசின் சதி

–விடுதலைப்புலிகள், குரல்–36

வரலாற்றில் எப்போதாவது சிலவேளைகளில் நடைபெறும் ஒரு சம்பவம், ஒரு தேசிய இனத்தை முழுமையாகவே சோகத்தில் ஆழ்த்தி விடுவதுண்டு.

தமிழீழ மக்களைப் பொறுத்தளவில் இத்தகைய பல துயரச் சம்பவங்களை, இந்த விடுதலைப் போராட்ட காலத்தில் சந்தித்துவிட்டார்கள்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, கேணல் கிட்டுவும் ஏனைய ஒன்பது போராளிகளும் வீரச்சாவடைந்த வரலாற்றுச் சம்பவம் அமைந்துவிட்டது.

இது தமிழீழ ஆன்மாவைத் துடிக்கச் செய்து துயரத்துள் ஆழ்த்தி விட்டது.

ஈழத்தமிழர்களை முழுமையாகவே உலுக்கியெடுத்த இந்தத் துயர நிகழ்ச்சிக்குக் காரணம் எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசல்ல; எமது வரலாற்று நண்பனாக நடித்த இந்திய அரசேயாகும்.

மேற்குலக நாடுகள் சிலவற்றின் முன்முனைப்புடன், தமிழர் தேசிய இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றின் ஆலோசனைகளுடன், சர்வதேசக்கடல்வழியூடாகத் தமிழீழம் நோக்கி வந்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழத் தேசியத்தின் ஆழ்மனதில் ஆழமான வடுவாகப் பதிந்த வரலாற்றுக் காயம் காலம் காலமாக அழியாது இருக்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொண்டிருந்த தளபதி கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் இந்திய அரசு வழிமறித்து, மரணப் பொறி ஒன்றை அமைத்து, அதற்குள் சிக்கச் செய்து கொன்றுவிட்டது.

கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வங்கக் கடல் வழியாகப் பயணம் செய்துகொண்டிருக்கிறார் என்ற செய்தியை இந்திய அரசு அறிந்து கொண்டது. அக் கப்பலில் கேணல் கிட்டு அவர்கள் மேற்குலக சமாதான முயற்சியின் தூதுவனாகப் பயணம் செய்கின்றார் என்பதும் இந்திய அரசுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அக்கப்பலை இடைமறிக்கும்படி இந்திய அரசு கட்டளை வழங்கியது.

சர்வதேசக் கடற்பகுதியில் பயணம் செய்துகொண்டிருந்த கப்பலை, இந்தியக் கடற்படையின் இரண்டு நாசகாரிக் கப்பல்கள், ஜனவரி 13ம் திகதி அன்று தடுத்து நிறுத்தின; பின்னர் இந்தியக் கரைநோக்கிக் கப் பலைச் செலுத்தும்படி நிர்ப்பந்தித்தன.

இந்தச் செய்தியைக் கப்பலில் இருந்த தொலைத்தொடர்புக் கருவி மூலம் கேணல் கிட்டு அவர்கள் எமது சர்வதேசத் தலைமையகத்திற்கு அறிவித்தார். இச் செய்தியினை பிரான்சில் இருந்தபடி எமது பிரதிநிதி திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் உலகச் செய்திநிறுவனங்கள் மூலம் வெளிப்படுத்தியதோடு, சில ஐரோப்பிய நாடுகளுக்கும், தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கும், சில மனித உரிமை நிறுவனங்களுக்கும் அறிவித்து கேணல் கிட்டுவை விடுவிக்க உதவும்படி வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் கேணல் கிட்டுவின் சமாதானப் பயணத்தைப் பற்றியும் பகிரங்கப்படுத்தினார்.

ஜனவரி 15ம் திகதி உலகெங்கும் இச் செய்தி பரவிவிட்டது. ஆனால், இந்திய அரசு இதைப்பற்றி எதுவுமே கூறாது மௌனமாக இருந்தது. அந்த மௌனத்தின் உள்ளே சூழ்ச்சி வலை ஒன்று சுறுசுறுப்பாகப் பின்னப்பட்டுக்கொண்டிருந்தது.

கிட்டுவை உயிருடன் பிடிக்கவேண்டும் அல்லது அவரை அழிக்க வேண்டும்; மேற்குலகின் சமாதான முயற்சியைக் குழப்பவேண்டும் என இந்திய ஆளும் வர்க்கம் முடிவெடுத்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இரண்டு நாள் கடற் பிரயாணத்தின் பின், கேணல் கிட்டுவும் தோழர்களும் பிரயாணம் செய்த கப்பல் சென்னைத் துறைமுகத்திற்கு நேரே, இந்தியக் கடல் எல்லை வரையும் கொண்டுவரப்பட்டது. அங்கே வைத்துச் சரணடையும்படி இந்தியக் கடற்படையால் கட்டளையிடப்பட்டது; மறுத்தால் கப்பல் தாக்கப்பட்டுக் கைது செய்யப்படுவீர்கள் என எச்சரித்தது; எதிர்த்தால் கப்பல் மூழ் கடிக்கப்படும் எனவும் மிரட்டியது.

இதில் எது நடந்திருந்தாலும் அது இந்திய அரசுக்கு வாய்ப்பாகவே முடிந்திருக்கும்.

சரணடைந்திருந்தால் கேணல் கிட்டுவையும் ஏனையோரையும் கைதுசெய்து, பொய்வழக்குகளைப் புனைந்து, அவர்களை அவமானப் படுத்திச் சித்திரவதை செய்வதுடன், எமது இயக்கத்தையும் எமது விடுதலைப்போராட்டத்தையும் சர்வதேச சமூகத்திற்குக் கொச்சைப் படுத்திக் காட்டியிருக்கும். ராஜீவ்காந்தி மீதான கொலைக் குற்றச் சாட்டைக் கேணல் கிட்டு மீது சுமத்தி, அவரை நிரந்தரமாகச் சிறைக்குள் தள்ளிக் கொடுமை செய்திருக்கும்.

இந்திய அரசின் அநாகரிகமான அரசியல் மரபும், காட்டுமிராண் டித்தனமான இழிசெயல்களும் எமக்குப் பழக்கமானவையாகும்.

1987 ஆம் ஆண்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின், ஒரு காலை இழந்திருந்த கேணல் கிட்டுவிற்கு மருத்துவ வசதி செய்து தருவதாகக் கூறித் தனது விமானப்படை விமானத்தில் அவரை இந்திய அரசு சென்னைக்கு அழைத்துச் சென்றது. பின்னர் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுடனான போர் தொடங்கிய பின், ''தகுந்த அனுமதிப் பத்திரம் இன்றி இந்தியாவிற்குள் வந்தார்'' எனக் குற்றஞ் சாட்டி அவரைச் சிறைக் குள் தள்ளியது. இதே போன்று, மருத்துவ வசதி பெறவென இந்திய அர சின் அனுமதியுடன் தமிழ்நாடு சென்ற நூறுக்கும் மேற்பட்ட போராளிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுகளைப் புனைந்து, அவர்களையும் சிறையில் தள்ளியது. முள்ளந்தண்டில் துப்பாக்கிச் சூடுபட்டு நெஞ்சுக்குக் கீழ் உணர் விழந்து படுத்தபடுக்கையாகக் கிடந்த ஒரு போராளியை, ''பொலிஸ் அதிகாரியின் மனைவியைக் கற்பழிக்க முயன்றார்'' எனக் குற்றம் சுமத்திச்

Tamileelam Archive

சிறையில் அடைத்தது. இதுபோன்று அங்கங்கள் ஊனமான போராளிகள் மீதெல்லாம் அநாகரிகமான முறையில், நகைப்புக்கிடமான குற்றங்களைச் சுமத்தி அவர்களைச் சிறையிலடைத்தது.

சரணடைய மறுத்துக் கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலிலேயே இருந்திருப்பார்களேயானால், கப்பலை மூழ்கடித்துவிட்டு,



**தீருவில் நினைவுச் சதுக்கத்தில், தளபதி கிட்டுவின் அம்மாவிற்கு தலைவர் ஆறுதல் கூறுகிறார்.**

**தமிழீழ ஆன்மாவைத் துடிக்கச் செய்து, தமிழர்களை முழுமையாகவே உலுக்கியெடுத்த இந்தத்துயரத்திற்குக் காரணம், எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசல்ல; வரலாற்று நண்பனாக நடித்த இந்திய அரசேயாகும்.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமது போர்க்கப்பலைத் தாக்க வந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்து விட்டோம் என வெற்றி அறிக்கையை இந்திய அரசு வெளியிட்டிருக்கும்.

இந்த நிலையில் தான், சரணடைவதுமில்லை; இந்திய அரசின் பொய்ப்பிரச்சாரத்திற்குப் பலியாவதுமில்லை என்ற முடிவுடன், கேணல் கிட்டு அவர்களுடன் லெப். கேணல் குட்டிசிறி, மேஜர் வேலவன், கப்டன் ஜீவா, கப்டன் றோசான், கப்டன் குணசீலன், கப்டன் நாயகன், லெப். அமுதன், லெப். நல்லவன், லெப். தூயவன் ஆகிய போராளிகளும் வேறு வழிகளின்றித் தமது கப்பலையும் தகர்த்து, தங்களைத் தாங்களே அழித்து கௌரவமாக வீரச்சாவடைந்தனர்.

கேணல் கிட்டு பிரயாணம் செய்த கப்பலை வழிமறித்து அவர்களை இந்தியாவிற்குக் கொண்டு செல்ல முயன்றபோதே, அவரை உயிருடன் பிடிக்கமுடியாது என்பது இந்திய அரசிற்கும் நன்கு தெரியும். புலிகளின் வீரமரபைப்பற்றி உலகிற்கே தெளிவாய்த் தெரியும். அவமானப்பட்டுச் சரணடைவதைவிட சாவையே புலிகள் மேலாக மதிக்கிறார்கள் என்பது எல்லோர்க்கும் தெரியும்.

தனது சூழ்ச்சிவலைக்குள் அகப்பட்ட கேணல் கிட்டுவைச் சாகடிப்பது தான் இந்திய அரசின் நோக்கம். அதற்கான ஒரு நியாயத்தை உலகிற்குக் காட்டுவதற்காகவே மௌனத்தைக் கடைப்பிடித்தபடி, அவர்கள் பயணம் செய்த கப்பலைத் தனது கடல் எல்லை வரை இழுத்து வந்தது; அத்துடன் கேணல் கிட்டுவும் தோழர்களும் தங்களைத் தாங்களே அழித்துக் கொள் ளும்படி நெருக்குதலையும் உருவாக்கிக் கொடுத்தது.

இந்திய அரசின் இந்த நயவஞ்சகச் செயலை எண்ணியெண்ணி ஈழத் தமிழினம் குமுறுகின்றது.

இப்படுபாதகச் செயல் தமிழீழத் தேசியத்தின் ஆழ்மனதில் ஆழமான வடுவை உண்டாக்கியுள்ளது. இந்த வரலாற்றுக் காயம், காலம் காலமாக அழியாது இருந்து, இந்திய அரசின் உண்மை முகத்தைத் தமிழீழச்சந்ததி களுக்குச் சொல்லிக்கொண்டேயிருக்கும்.

❑

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஆசையோடு தேசம் காண வந்த வீரனே!

-புதுவை இரத்தினதுரை

தளராத துணிவோடு களமாடினாய் - இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணலானதோ? - இந்தி
அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ

நீ நடந்த பாதையெங்கும் பூ மலர்ந்தது - தமிழ்
ஈழமெங்கும் உந்தனது பேர்கலந்தது
தாயகத்துப் போர்க்களத்தில் நீ முழங்கினாய் - தம்பி
தானையிலே தளபதியாய் நீ விளங்கினாய்

அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது - கொடும்
அரக்கர்களின் அம்பு பட்டுத் துடிதுடித்தது
இமய நாடு உந்தனுக்குக் குழி பறித்தது - உன்னை
இழந்ததினால் எங்கள் நெஞ்சு பதை பதைக்குது

சிங்களத்துப் படைகளோடு போராடினாய் - வந்த
இந்தியர்களோடும் அன்று வாதாடினாய்
பொங்குகின்ற புலிகளுக்கு வழி காட்டினாய் - இன்று
புயல்படுத்த மாதிரியாய் விழி மூடினாய்

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சை ஆளுவாய்
பிரபாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே! - கிட்டு
அண்ணன் என்ற பேரெடுத்த எங்கள் தேவனே!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும்

-விடுதலைப்புலிகள், குரல் - 36
(புலிகளின் குரல்)

சர்வதேசக் கடற்பரப்பு வழியே தமிழீழம் நோக்கி கேணல் கிட்டுவும் ஏனைய தோழர்களும் பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பலை - சர்வதேசக் கடற் சட்டத்தையும் மீறித் தடுத்து நிறுத்தி, மரணப் பொறி யொன்றை அமைத்து அவர்களைச் சாகடித்ததன் மூலம், மீண்டும் இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்குத் துரோகமிழைத்துவிட்டது.

இந்திய அரசு ஏன் இப்படி நடந்துகொண்டது?

புலிகள் இயக்கத்தை அழிக்க இந்திய அரசு ஏன் இவ்வளவு தீவிரமாக இருக்கிறது?

இந்திய அரசின் பூகோள - தேசிய நலன்களும், அதன் பிராந்திய மேலாதிக்க வெறியும்தான் இதற்குக் காரணம்.

இலங்கைத் தீவில் 'தமிழீழம்' என்ற தனிநாடு அமைவது தனது தேசிய - பிராந்திய நலன்களுக்குக் குந்தகமாக அமைந்துவிடும் என இந்திய அரசு அஞ்சுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எனவேதான் தனியரசொன்றை அமைப்பதற்கான எமது விடுதலைப்போராட்டத்தை ஒடுக்குவதில் அது கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

ஆயுதம் தாங்கிய இந்தத் தேச விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடாத்தும் புலிகள் இயக்கத்தை அழிப்பதன் மூலம் போராட்டத்தை ஒடுக்க அது கங்கணங் கட்டி நிற்கிறது.



யாழ்ப்பாணத்தில் நடந்த பெருவிழாவில், மக்கள் கடலின் முன் முதுபெரும் தளபதி கிட்டு

**தேச விடுதலைப்போராட்டத்தைத் தலைமை தாங்கி வழிநடாத்தும் புலிகள் இயக்கத்தின் தலைமைப் பீடத்தை அழிப்பதன் மூலம் போராட்டத்தை அழித்துவிடுவதில் இந்திய அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புலிகள் இயக்கத்தின் தலைமைப் பீடத்தைப் படிப்படியாக அழிப்பதன் மூலம், அதைச் சுலபமாகச் சாதித்துவிடலாம் எனத் தீர்மானித்துள்ளது.

இந்திய அரசின் இந்த நயவஞ்சகத் திட்டத்திற்கு இப்போது எமது மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டுவும் பலியாகிவிட்டார்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மூலம் ஈழத்தமிழர்கள் மத்தியில் வளர்ந்துவரும் தமிழ்த்தேசிய எழுச்சியைக் கண்டு இந்திய அரசு அஞ்சுகின்றது. இத் தமிழ்த்தேசியம் வளர்ந்து முதிர்ச்சி பெற்றுத் தமிழீழத் தனியரசு அமையுமானால், அது தமிழ் நாட்டிலும் தன்னாட்சிக் கோரிக்கைக்குப் புத்துயிர் அளித்துவிடுமென, இந்திய அரசு பயப்படுகின்றது. அத்துடன் இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி, இந்திய உபகண்டத்தில் இருக்கும் தேசிய இனங்கள் மத்தியில் தேசிய இன எழுச்சிகளை உண்டுபண்ணி, இந்திய சாம்ராச்சியத்திற்கு ஆபத்தை உண்டாக்கிவிடுமெனவும் இந்திய அரசு கலங்குகின்றது.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைத் தீவில் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் ஒரு அரசியல் உறுதிப்பாடு இருக்கவேண்டும் என்பதில் இந்திய அரசு மிகவும் அக்கறையாக இருந்தது. ஏனெனில், இலங்கைத் தீவில் அரசியல் உறுதிப்பாடு இல்லாவிடின் அதைச் சாட்டாக வைத்து, இங்கே உலக வல்லரசுகள் தலையீடுகளைச் செய்யுமெனவும், அத்தலையீடுகள் இந்திய அரசின் பிராந்திய-பூகோள நலன்களுக்கு அச்சுறுத் தலைக் கொடுக்குமெனவும் இந்திய அரசு எண்ணியது.

இந்த அச்சத்தின் அடிப்படையில்தான் கடந்த 10 வருடங்களாக, இந்திய அரசு பல்வேறு பரிமாணங்களில் எமது விடுதலைப் போராட்டத்தில் தொடர்ச்சியாகத் தலையிட்டு வருகின்றது.

ஆனால் இந்திய அரசின் இந்த அச்சங்கள் உண்மைக்குப் புறம்பாக மிகைப்படுத்தப்பட்டவைகளாகும்.

இன்று உலகம் மாறிவிட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்து புதியதொரு அரசியல் ஒழுங்கும் பிறந்துவிட்டது. இப்புதிய உலக ஒழுங்கிற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கமைய இந்திய அரசும் தனது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் தலைகீழ் மாற்றங்களைச் செய்துவிட்டது.

எந்த உலக வல்லரசுகள் இப்பிராந்தியத்தில் தலையீடு செய்துவிடும் என இந்திய அரசு பயந்ததோ, அதே நாடுகளுடன் இன்று நெருங்கிய உறவுகளை அது ஏற்படுத்தியுள்ளது.

அந்த வல்லரசுகளுக்கே தனது உள்நாட்டுச் சந்தையையும் திறந்து விட்டுள்ளது; அவற்றுடன் பொருளாதார உடன்படிக்கைகளைச் செய் துள்ளது; இராணுவ ஒத்திகைகளை நடாத்தி வருகின்றது.

குறிப்பாக அமெரிக்காவும் இஸ்ரேலும் இன்று இந்திய அரசின் நட்புச் சக்திகளாகவே மாறிவிட்டன.

ஆனாலும், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந் தமான வெளிநாட்டுக் கொள்கையை மட்டும் இந்திய அரசு மாற்றவே யில்லை.

மிகைப்படுத்தப்பட்ட அச்சங்கள் காரணமாகவும், நியாயமற்ற சந்தேகங்கள் காரணமாகவும், தமிழீழ விடுதலைப்போராட்டத்தைப் பகைமைக் கண்களுடனேயே இந்திய அரசு இன்றும் பார்க்கின்றது. இது துரதிட்டவசமானது.

ஈழத்தமிழர்கள் நடாத்தும் தன்னாட்சிப்போர் தமிழ்நாட்டில் தாக் கத்தை ஏற்படுத்தும் என்ற இந்திய அரசின் வாதம், யதார்த்தத்திற்குப் புறம்பானது.

ஓர் ஆயுதப்போராட்டத்தைப் பிறப்பிக்கச் செய்வதற்கு, அதற்கே உரித்தான புறச்சூழல்கள் இருக்கவேண்டும். தமிழீழத்தின் புறச்சூழல் தமிழ்நாட்டிற்கு இல்லை.

சிங்களப் பேரினவாதத்தால் இங்கு ஒரு தமிழின சங்காரமே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. பல்லாயிரம் தமிழர்கள் சிங்களப் படைகளினால் கொல்லப்பட்டுவிட்டனர். தமது சொந்த இடங்களி லிருந்தே அகதிகளாக விரட்டப்பட்டுவிட்டனர். சொந்த மண்ணிலேயே சிறைவைக்கப்பட்டிருப்பதுபோல அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழினம் தன்னைப் பாதுகாப்பதற்காக ஆயுதமேந்திப் போராட வேண்டிய வரலாற்றுத் தேவையும் அவசியமும் இங்கு இருக்கின்றது. இல்லாவிடின் ஈழத்தமிழினமே அழிந்துபட்டுவிடும். ஈழத்தமிழினம் எதிர்நோக்கியுள்ள இந்த அபாயத்தை உணராத இந்திய அரசு, எமது மக்களை அழித்தொழிப்பதற்குச் சிங்கள அரசுக்குத் துணைபோவது தமிழ் இன அழிவுக்கு வழிவகுக்கும்.

தனித்துவமான வரலாற்று நிர்ப்பந்தங்களால் தமிழீழத்தில் தோன்றியுள்ள சுதந்திரப் போராட்டத்தையும் அதன் நியாயப்பாடுகளையும் புரிந்துகொள்வதை விடுத்து, எமது விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு தனது உள்நாட்டுப் பிரிவினை வாதங்களுடன் ஒப்பிடுவதும், அதனால் தனது தேசிய நலனுக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதுவதும் மிகவும் தவறான, குருட்டுத்தனமான பார்வையாகும்.

இந்தத் தவறான கண்ணோட்டத்தின் காரணமாகவே, இந்திய ஆட்சிபீடம் அநியாயமான முறையில் எமது விடுதலைப் போராட்டத்தில் குறுக்கிடுகின்றது.

மாறிவரும் இப் புதிய உலகில், தேசிய சுதந்திரம் பெற்றுள்ள எத்தனையோ புதிய நாடுகளை அங்கீகரித்துள்ள இந்திய அரசு, எமது விடுதலைப்போராட்டம் சம்பந்தமாகவும் தனது விடாப்பிடியான நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டும்.

தமிழீழ அரசு அமைவது இந்திய தேசிய நலனுக்கோ அல்லது அதன் பிரதேச - பூகோள நலனுக்கோ எந்தவித அச்சுறுத்தலாகவும் அமையாது என இந்திய அரசு புரிந்துகொள்ளவேண்டும். அதன் அடிப்படையில் தமிழீழம் தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை இந்திய அரசு மாற்றியமைத்து, தமிழீழ மக்களின் நியாயபூர்வமான சுதந்திரப்போராட்டத்திற்கு ஆதரவளிக்க முன்வரவேண்டும்.

❑

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# இந்தியா புரிந்த கொலையும் ஐரோப்பாவின் மௌனமும்

– முதுபெரும் தளபதி கேணல் கிட்டு மற்றும் வேங்கைகளின் நினைவு நடுகல் திரைநீக்க நிகழ்வின்போது திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய உரை.

"தளபதி கிட்டு எதற்காகத் தமிழீழம் வந்தார்?

"அவர் வரும்பொழுது ஒரு சமாதானத்திட்டத்தைக் கொண்டு வந்தாரா? அந்தச் சமாதானத் திட்டம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது? இதனுடைய பின்னணி என்ன? ஐரோப்பிய நாடுகள் இதில் ஈடுபட்டுள்ளனவா? எந்த அளவிற்கு இந்தச் சமாதானத்திட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பங்குவகித்தன? இந்தியாவிற்கும் ஏற்கனவே இது பற்றித் தெரியுமா? இந்தியாவின் பங்கு என்ன? என்ற சில முக்கிய விடயங்கள் பற்றி-இது வரைக்கும் உங்களுக்குத் தெரியாத விடயங்கள் பற்றி-இங்கு எடுத்து விளக்க விரும்புகின்றேன்.

"உங்களுக்குத் தெரியும் நாங்கள் தளபதி கிட்டுவை மேற்குலகத்திற்கு அனுப்பியதன் காரணம். மேற்குலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு, அவற்றின் ஆதரவைப் பெற்று எமது பிரச்சினைக்குச் சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெறவேண்டும்; அதற்காக எமது மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் மேற்கு ஐரோப்பாவில் செயற்படவேண்டும்; அவர் பல தொடர்புகளை எடுக்கவேண்டும் என்ற நோக்குடன்தான் தலைவர் பிரபாகரன், தளபதி கிட்டு அவர்களை மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தார்.

"அவரை இங்கிலாந்திற்கு அனுப்பியதில் எங்களுக்கும் முக்கிய ஒரு பங்குண்டு. நாங்கள் கொழும்பில் பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டிருந்தபொழுதுதான் கிட்டுவை நாங்கள் தங்கியிருந்த விடுதிக்குக் கொண்டுவந்து, அங்கு அவரைத் தங்க வைத்துப் பிரித்தானிய தூதுவர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிட்டுவை நேரில் வந்து சந்தித்து, அவர் அளித்த உறுதிமொழிகளின் பேரில் தான் நாம் கிட்டுவை இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தோம். கிட்டு யார்? அவரின் அந்தஸ்து என்ன? அவர் ஒரு விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். அவர் வெளிநாடுகளில் என்ன பங்கு வகிப்பதற்குச் செல்கின்றார் என்பது எல்லாம் இங்கிலாந்திற்கும் மற்றும் சில நாடுகளுக்கும் தெரியும். ஏனென்றால் கொழும்பில் இருந்து கிட்டு லண்டனுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாகப் பல தூதர்களைக் கொழும்பு ஹொட்டேலில் வைத்துச் சந்தித்துத் தமது நோக்கத்தை விளங்கப்படுத்தினார். பிரித்தானிய தூதுவர் தான் நேரடியாகக் கிட்டு விடம் கொண்டு வந்து கடவுச்சீட்டைக் கொடுத்து, அவர் விமானத்தில் பத்திரமாக அங்கு செல்வதற்கான வசதிகளைச் செய்துகொடுத்தார். ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால், இந்தச் சமாதானத் திட்டத்தில் பிரிட்டனுக்கு முக்கிய பங்கு உண்டு.

''உங்களுக்குத் தெரியும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐம்பது நாடுகளில் கிளை அமைப்புக்கள் இருக்கின்றன. லண்டன் சென்ற கிட்டு, இந்தக் கிளை அமைப்புக்களை எல்லாம் ஒருங்கமைத்து, ஒன்றுபடச் செயற்படவைத்து லண்டனில் எங்களது சர்வதேச தலைமையகத்தை அமைத்தார். நீண்டகாலமாகச் செயலிழந்து போய்க் கிடந்த பல அமைப் புக்களைச் செயற்படச் செய்தார். வெளிநாடுகளில் அவர் நடாத்திய பிரச்சாரம், அவர் சந்தித்த இராஜதந்திரிகள், புரட்சித்தலைவர்கள் எமது போராட்டத்தைச் சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச் செல்ல அவர் செய்த காரியங்கள் ஏராளம். அவர் மேற்கு நாடுகளில் இருந்து தமிழீழ மக்களின் பிரச்சினைகளுக்கு ஓர் அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற விடயத்திலேயோ, சமாதானத்தை உருவாக்கவேண்டும் என்ற விடயத் திலேயோ சில உருப்படியான காரியங்களைச் செய்துகொண்டிருந்தார். உங்களுக்குத் தெரியும், ஒரு சில மாதங்களுக்கு முன்னர் 'குவேக்கஸ்' சமாதானக் குழு ஒன்று மேற்குலகத்திலிருந்து இங்கு வந்தது. இவர்கள் இங்கு வரும் பொழுது கிட்டுவையும் திலகரையும் சந்தித்துவிட்டுக் கொழும்பிலுள்ள முக்கிய அமைச்சர்களையும் சந்தித்துவிட்டுத்தான் இங்கு வந்தார்கள். இங்கு வந்து இது சம்பந்தமாக சில யோசனைகளை எங் களிடம் தெரிவித்தார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவது? எங்கு பேச்சுக்களை நடத்துவது? யாருடன் பேச்சுக்களை நடத்துவது? என்ற பிரச்சனை அந்த நேரத்தில் இருந்தது. நாங்கள் இங்கே இருந்து முன்பு போலக் கொழும்புக்குப் போய் பேச்சுக்களை நடத்த முடியாது. எப்படிப் போவது? சிங்கள இராணுவத்தை நம்பிக் கொழும்புக்குப் போய்ப் பேச்சுக் களை நடாத்த முடியாது. எனவே வெளிநாட்டுத் தலைநகரமொன்றில்



"பாகிஸ்தானின் அணுகுண்டை விட பிரபாகரனின் மன உறுதிக்கு இந்தியா அஞ்சுகின்றது. பிரபாகரனை எப்படியாவது அழிக்கவேண்டும்; விடுதலைப்புலிகளின் உறுதிமிக்க தலைமைப்பீடத்தை உடைத்து எறியவேண்டும் என்று இந்தியா கங்கணம் கட்டி நிற்கின்றது. இந்நிலையிலேயே, நாசகாரிக் கப்பல்களிலிருந்து பீரங்கிகளை நீட்டிக் கொண்டு சரணடையச் சொன்ன இந்தியாவிடம் அடிபணியாது தளபதி கிட்டு வீரச்சாவைத் தழுவினார்."

Tamileelam Archive

வைத்து பேச்சுக்களை நடாத்துவதற்குத் திட்டம் தீட்டப்பட்டது. இதில் கிட்டுவும் திலகரும் பங்கெடுக்கவேண்டியது அவசியமாயிருந்தது.

"இங்கிருந்து தலைவர் பிரபாகரனின் பிரதிநிதிகளாக ஒரு சிலர் வெளிநாட்டுக்குப் போகலாம்; வெளிநாட்டுத் தலைநகரம் ஒன்றில் வைத்து இந்தப் பேச்சுக்களை நடத்தலாம் என்று 'குவேக்கஸ்' சமாதானக் குழு எம்மிடம் தெரிவித்தது. ஆனால், அப்பொழுது ஒரு பிரச்சினை எழுந்தது. எதைப்பற்றிப் பேசுவது? வடக்கு-கிழக்கு மாகாணத்தை இணைத்துத் தமிழர் தாயகத்தை ஏற்றுக்கொள்ளாத சிங்கள அரசிடம் எந்த அடிப்படையில் பேசுவது? சமஸ்டியைப் பற்றியா பேசுவது? இதில் சமஸ்டி என்று சொன்னது வடக்குக் கிழக்கு ஒன்றாக இணைந்து தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில் ஒரு சமஸ்டி யோசனை வந்தால் அதைப் பற்றிப் பேசலாம். ஆனால், சிங்களவர்கள் எதையுமே உருப்படியாக தருவதற்குத் தயாராக இல்லை. அப்பொழுது நாங்கள் ஒரு யோசனையை இந்த 'குவேக்கஸ்' சமாதானக் குழுவிடம் கூறினோம்.

"ஒரு இடைக்காலத் தீர்வொன்றை ஏற்படுத்துவோம். முதலில் யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவோம்; தமிழீழத்தில் ஒரு சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவோம். எமது மக்கள் இந்தக் கடந்த மூன்று ஆண்டுப் போரினால் மிகவும் நொந்துபோய் இருக்கிறார்கள்; தாங் கொணாப் பளுக்களைச் சுமந்து நிற்கிறார்கள். இந்த மக்களுக்கு ஒரு நிம்மதி வேண்டும். இந்த மக்களுக்கு ஒரு சமாதான சூழ்நிலை வேண்டும். ஆகவே முதலில் இந்த சமஸ்டி, இணைப்பு-அவற்றைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டு முதலில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவோம். மக்கள் மத்தியில் ஒரு நல்லெண்ண நம்பிக்கையைப் பிறப்பிப்பதற்கு சிறீலங்கா அரசு ஏதாவது உருப்படியாகச் செய்யவேண்டும். இதற்கும் ஒரு திட்டம் கொடுத்தோம். முதலில் இரண்டு தரப்பும் யுத்தநிறுத்தப் பிர கடனம் செய்வோம். சிங்கள அரச படைகள் சில இடங்களில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறவேண்டும். குறிப்பாக எங்களது குடி யிருப்புக்களை ஆக்கிரமித்திருக்கும் பகுதிகள், எங்களது போக்குவரத்துப் பாதையைத் தடுத்துநிற்கும் பகுதிகள், எமது குடாநாட்டை முற்றுகை யிடும் நோக்கில் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகள் ஆகியவற்றில் இருந்து சிங்களப் படை வாபஸ் பெறவேண்டும். அதற்குப் பின் ஒரு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இடைக்கால நிர்வாக ஒழுங்கிற்கு ஏற்பாடு செய்வோம். இந்த இடைக்கால நிர்வாக ஒழுங்கு புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலம் வரை, ஓராண்டோ இரண்டாண்டோ, இந்த இடைக் கால நிர்வாக ஒழுங்கு இருக்கவேண்டும். இந்தக்காலகட்டத்தில் தமிழீழ மக்களுக்கு நிவாரணம், புனருத்தாரணம், மற்றைய சகல வசதிகளையும் சிறீலங்கா அரசு செய்துகொடுத்து, தமிழீழ மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும்; நம்பிக்கையைப் பெறவேண்டும். துன்பதுயரத்தில் இருந்து மக்களுக்கு ஒரு வழியைக் காட்ட வேணுமென்று கூறினோம்.

"இப்படியான ஒரு சமாதான ஒழுங்கைக் கொண்டு வாருங்கள்; நாங்கள் ஒத்துழைக்கிறோம். போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார். இந்தத்திட்டத்தின் விபரம் பற்றி வெளிநாட்டுத் தலைநகரமொன்றில்



**"தளபதி கிட்டு வெளிநாடுகளில் பிரச்சாரங்களைச் செய்தார், இராஜதந்திரிகளையும் புரட்சித்தலைவர்களையும் சந்தித்தார். எமது போராட்டத்தை சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச் செல்ல அவர் செய்த காரியங்கள் ஏராளம்."**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். இவ்வாறாக எமது யோசனையை 'குவேக்கஸ்' சமாதானக் குழுவிற்குச் சொன்னோம். இந்த யோசனை பற்றி 'குவேக்கஸ்' குழு சிங்கள அரசுடன் பேசியது. பின்னர் சில ஐரோப்பிய நாடுகளுடன் இத்திட்டம் பற்றிப் பேசியது. அவர்கள் சொன்னார்கள்: 'புலிகளின் நிலைப்பாடு சரி, இந்தப் பிரச்சனையை உடனடியாகத் தீர்க்க முடியாது. உடனடியாக அரசியல் தீர்வு வராது.' ஆகவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து சிபார்சு செய்யப்பட்ட ஒரு வடிவத்தில் ஒரு இடைக்கால ஒழுங்கைச் செய்யலாம் என 'குவேக்கஸ்' குழு ஐரோப்பிய நாடுகளுடன் பேசியது. இதற்குப் பின் இந்த சமாதானக் குழு இங்கிலாந்து சென்று கிட்டு, திலகருடன் தொடர்புகொண்டது. இந்த யோசனைகள் குறித்துப் பேசவேண்டும். எப்படிப் பேசுவது? எங்கு பேசுவது? இது பற்றிய விபரமான விடயங்கள் கிட்டுவிற்கும் திலகருக்கும் தெரியும்.

"இதனிடையில் ஒரு சிறிய பிரச்சினை. இங்கிருந்து நாங்கள் யாராவது இங்கிலாந்திற்குப் போவதாக இருந்தால் கப்பல் மூலம் செல்ல ஒரு மாதத்திற்கும் மேலாகலாம். விமானம் மூலம் செல்வதானால் கொழும் பிற்குச் செல்லவேண்டும். அது இந்தச் சூழ்நிலையில் நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு விடயம். இத் தருணத்தில் 'குவேக்கஸ்' சமாதானக் குழு எமக்கு அறிவித்திருந்தது, இங்கிருந்து வருவோர்கள் இந்தியாவிற்கு வந்தால் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு வரலாம் என்று. ஆனால், நாங்கள் இங்கிருந்து வெளிக்கிடுவதற்கு முன்பாக இந்தச் சமாதானத் திட்டத்தின் விபரங்கள், இலங்கை அரசின் நிலைப்பாடு, மேற்கத்தைய ஐரோப்பியநாடுகள் கொண்டுள்ள நிலைப்பாடு, இங்கிலாந்தில் இப் பேச்சுக்களை நடத்துவதற்கான சூழல் எப்படியிருக்கின்றது என்பது பற்றி, அங்கிருந்து எங்களுக்குச் சில விபரங்கள் தேவையாக இருந்தன. தலைவர் பிரபாகரனுக்குச் சைகை வார்த்தைகள் மூலம் இப்படியான விடயங்களைக் கொடுக்க வாய்ப்பில்லை. ஆகவேதான் கிட்டு வரும் போது இந்த விபரங் களைக் கொண்டுவந்தார். இது இந்தியாவிற்கு நன்கு தெரியும். ஏனென் றால், இந்தச் சமாதானக்குழு ஒரு வாரம் வரை இந்தியாவில் தங்கியி ருந்து, புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைப் பார்த்துப் பேசியிருந்தது. பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளோடும் பேசியிருந்தது. புலிகளின் போக்குவரத்திற்கு இந்தியா உத்தரவாதம் அளிக்குமா என

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அவர்கள் கேட்டிருந்தனர். அப்போது புலிகளின் போக்குவரத்துக்கு உத்தரவாதம் அளிப்பதாக இந்தியா தெரிவித்திருந்தது. இதற்கான ஆவணங்கள் எம்மிடம் உண்டு.

"அதாவது எம்மை வெளிநாட்டிற்குக் கொண்டு செல்வதற்கும்-இந்தியாவின் உதவியுடன் கொண்டுசெல்வதற்கும்-போக்குவரத்திற்கு வசதி செய்வதற்கும் இந்தியா இணங்கியதாக இவர்கள் சொன்னார்கள். ஆனால், என்ன நடந்தது? ஏன் இப்படி இந்தியா ஒரு வாக்குறுதியைக் கொடுத்துவிட்டுக் கிட்டுவின் கப்பலை இடைமறித்தது? இந்தியாவிற்குத் தெரியும்-தளபதி கிட்டு ஏன் வருகிறார்? எதற்காக வருகிறார்? இந்தச் சமாதானத்திட்டம் எத்தகையது என்பது பற்றியெல்லாம் தெரியும். இதில் உண்மை நிலை என்னவென்றால், ஐரோப்பிய தலையீட்டை இந்தியா விரும்பவில்லை. அதனால் இந்தியா இந்த விடயம் மிக இரகசியமாகவே இருக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தது. மிகவும் இரகசியமாக இந்தப் பேச்சு நடக்கவேண்டும். இங்கிருந்தான போக்குவரத்துக்கள் மிக இரகசியமாக இருக்கவேண்டும் என்று இந்தியா கூறியது. ஆனால் நாம் அதை விரும்பவில்லை. இந்தியாவை நம்பி இரகசியப் பேச்சு என்று சொல்லி இங்கிருந்து டில்லிக்கு எப்படிப் போவது? இவர்கள் எம்மைக் கைது செய்து வைத்திருக்கலாம்; கொலை செய்யலாம்; கேட்பதற்கு யாரும் இல்லை. ஆகவேதான் தலைவர் பிரபாகரன், என்ன பேச்சு என்று சொன்னாலும் அது பகிரங்கமாக இருக்கவேண்டும்; அதிகாரபூர்வமான தாக இருக்கவேண்டும்; ஒரு வெளிநாட்டுத் தலை நகரத்தில் நடக்க வேண்டும்; அந்த வெளிநாடு அதற்கு மத்தியத்துவம் வகிக்கவேண்டும், என்பன போன்ற சில கோரிக்கைகளை விடுத்திருந்தார்.

"சிறீலங்காவும் இந்தப் பேச்சுக்களை இரகசியமாக நடத்த விரும்பியது. ஏனென்றால், இராணுவத்தினுள் பிரச்சனை வருமாம். மூன்று வருடமாக இராணுவம் புலிகளை எதிர்த்துப்போராடியது. நாலாயிரம் இராணுவத்தினர் இறந்துள்ளனர். பத்தாயிரம் இராணுவத்தினர் காய மடைந்து, ஊனமடைந்துள்ளனர். இன்னும் ஒரு பத்தாயிரம் பேர் இரா ணுவத்தை விட்டு ஓடியுள்ளனர். இப்படியாக இராணுவ அமைப்பே நிலைகுலைந்து போயுள்ளது. ஆகவே, மூன்று வருடமாகப் புலிகளை எதிர்த்துப் போராடிவிட்டு; புலிகளை எதிரிகளாகக் காட்டிவிட்டு, பின்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்துச் சமாதானம் நடாத்துவது என்றால் இராணுவத்தைப் பகைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, இராணுவத் திற்குத் தெரியாமல், உலகிற்குத் தெரியாமல் இரகசியமாகப் பேசுவோம் என்று சிறீலங்கா சொல்லியது. இந்தியாவும் இரகசியம்; பிரிட்டனும் இரகசியம். இப்படியே எல்லோரும் இரகசியமாகப் பேசுவோம் என்பதால் நாங்கள் சந்தேகப்பட்டோம். பேச முடியாது என்றோம். கிட்டு இங்கு வந்து சகல விபரத்தையும் எமக்குத் தந்தால் இது பற்றி நாங்கள் கூடிய ஆழமாக இந்த விடயத்தைப் பார்த்திருக்கலாம். இப்படியான சில தக வல்களுடன்தான் கிட்டு இங்கு வந்துகொண்டிருந்தார். அவர் எங்கிருந்து வந்தார்? எந்த விமானத் தளத்தில் இறங்கினார்? எந்தத் தென்னாசிய நாட்டின் தலைநகரில் இறங்கினார்? எங்கு படகெடுத்தார்? எப்படி வந்தார் என்பதெல்லாம் இந்தியப் புலனாய்வுத் துறைக்கு நன்கு தெரியும். ஆனாலும், கப்பலைத் தடுத்து நிறுத்தினார்கள் என்றால் இந்தச் சமாதான முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபடுவதை இந்தியா விரும்பவில்லை என்பதைத் தவிர வேறென்ன அர்த்தம்? இதைக் குழப்பவேண்டும் என்பதைத் தவிர வேறென்ன நோக்கம் இருக்கும்?

"தமிழீழத் தேசியப் போராட்டத்தை இந்தியாவினது ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஒரு பெரிய அச்சுறுத்தலாக இந்தியா கருதுகின்றது. ***பாகிஸ்தானின் அணுகுண்டை விடப் பிரபாகரனின் மன உறுதிக்கு இந்தியா அஞ்சுகின்றது.*** இங்கே ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டம் வெடித்துத் தமிழீழம் உருவானால், அங்குள்ள தேசிய இனங்கள் சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி நாடு உடையுமோ என்று இந்தியா பயம் கொள்கின்றது. இந்தியாவில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டங்களை விடத் தமிழீழத்தில் நடைபெறும் விடுதலைப்போராட் டத்திற்கு இந்தியா அஞ்சுகின்றது. ஏனெனில், இங்கு இருக்கின்ற சில பண்புகள்-எமது மக்களிடமிருக்கும் விடுதலை உணர்வு, விடுதலை எழுச்சி, போராளிகளின் மத்தியிலுள்ள தியாக உணர்வு, அர்ப்பணிப்பு-இந்திய உபகண்டத்தில் வேறெங்குமே இல்லை. அப்படியானதொரு போராட்ட சக்தி-அப்படியான போராட்டம் வெற்றி கண்டு அது இந்திய உபகண்டத்தில் பரவினால், இந்திய சாம்ராஜ்யம் இடிந்து விடும் என்று இந்தியா அஞ்சுகின்றது. ஆகவே, இந்தப்போராட்டத்தை வெற்றிகாண

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடக்கூடாது என்றும், விடுதலைப் புலிகளை நசுக்கவேண்டும் என்றும் இந்தியா விரும்புகின்றது. விடுதலைப் புலிகளின் தலைமையை ஒழித்துக் கட்டவேண்டும். ஒரு இயக்கத்தை அழிக்கவேண்டுமென்றால் உறுதிமிக்க தலைமைப்பீடத்தை உடைத்து எறியவேண்டும். அதுதான் பிரபாகரனை எப்படியாவது அழிக்கவேண்டும்; பிரபாகரனின் முக்கிய தளபதிகளை அழிக்கவேண்டும் என்று இந்தியா கங்கணம் கட்டி நிற்கின்றது. மேலும் தனது ஆதிக்க, வல்லாதிக்க வியூகத்திற்கு அப்பால் ஐரோப்பியநாடுகளின் தலையீடு இப்பிராந்தியத்தினுள் ஏற்பட்டுவிடக்கூடாது - ஐரோப்பிய நாடுகள் இங்கு தலையிட்டால் தனது செல்வாக்கும் ஆதிக்கமும் குறைந்து விடும் - என இந்தியா அஞ்சுகின்றது. எனவே, இதனைத் தடுக்க வேண்டும்; இடைநிறுத்தவேண்டும். இந்நிலையில்தான் கிட்டு ஏன் வருகின்றார்? எப்படி வருகின்றார்? எதற்காக வருகின்றார்? என்பதெல் லாம் ஏற்கனவே தெரிந்தும் இந்தியக் கரையிலிருந்து நானூற்றைம்பது மைல்களுக்கு அப்பால் - நிக்கோபார் தீவுகளுக்கு அப்பால் - வைத்து எங்களது கப்பலை இந்தியா இடைமறித்தது. இடைமறிக்கப்பட்டதும் நாம் இந்த விடயத்தை உடனடியாகச் சர்வதேச உலகுக்கும் அறிவித்தோம். இரண்டு நாள் கப்பல் பயணம் நடந்தது. இந்த இரண்டு நாளும் அந்தக் கப்பலில் நடைபெற்ற விடயங்கள் எங்களது சர்வதேசச் செயலகம் மூலம் உலகநாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது. உலக மனித உரிமை ஸ்தாபனங் களுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக இந்தியாவின் இந்தத் தலையீட்டை நிறுத்துங்கள், தளபதி கிட்டுவைக் காப்பாற்றுங்கள் என்று எத்தனையோ நாடுகளிடம் மன்றாட்டமாகக் கேட்டோம்.

"ஆனால், இந்தியாவிற்கு அழுத்தம் போடுவதன் மூலம் இந்தியாவை ராஜதந்திரரீதியாகப் பகைத்துக் கொள்ளப் பிரிட்டன் போன்ற நாடுகள் விரும்பவில்லை. பெரிய அளவில் பிரிட்டன் போன்ற நாடுகள் தலையிட்டு இந்தியா மீது அழுத்தம் போட்டிருக்குமானால் தளபதி கிட்டு காப் பாற்றப்பட்டிருப்பார். ஆனால், இந்த மேற்கு நாடுகள் அப்படிப்பட்ட முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை.

"இந்தியக் கடற்படையின் இந்த நடவடிக்கை குறித்து இந்திய அரசமட்டத்தில், வெளியுறவு அமைச்சு மட்டத்தில், பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. என்ன செய்வது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்பது தெரியாமல் இந்தியா இரண்டு நாட்களாக மௌனமாக இருந்தது. இதற்குள் இந்தியக் கடற்படை எமது தளபதிகளைக் கப்பலை விட்டு இறங்குமாறு ஆயுதமுனையில் அச்சுறுத்தியது. வேறு வழியில்லை. இரண்டு பெரிய நாசகாரக் கப்பல்களை அருகில் வைத்துக்கொண்டு - பீரங்கிகளை நீட்டிக்கொண்டு - சரணடையுங்கள் என்று கேட்டது. இந்திய அரசிடம் சரணடைந்தால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கனவே எமது போராளிகள் பலர் - கண்ணில்லாதவர்கள், முழு உடலும் இயங்காதவர்கள், வலது குறைந்த அங்கவீனர்கள் - இவர்களை எல்லாம் சிறையில் போட்டுச் சித்திரவதை புரியும் இந்திய அரசு கிட்டுவைக் கைப்பற்றியிருந்தால் - அவர் அசிங்கப்படுத்தப்பட்டிருப்பார்; கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார்; ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பார்; வேறு பல வழிகளில் அவர் மிக மிருகத்தனமாக நடத்தப்பட்டிருப்பார். இந்நிலையில் இந்தியாவின் பயமுறுத்தலுக்கு - அச்சுறுத்தலுக்கு - அடிபணியக் கூடாது என்பதால் அவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

''ஆனால் இதற்குப் பின்னணியில் பல ராஜதந்திரத் தலையீடுகள் உண்டு. எமக்குக் கவலை என்னவெனில், இந்தத் தீர்வுத்திட்டத்தை முன்மொழிந்த சில நாடுகள், முக்கியமாகப் பிரிட்டன் போன்ற நாடுகள், - 'குவேக்கஸ்' சமாதானக் குழுவை இங்கு அனுப்பிய நாடுகள் - இதில் மௌனம் சாதித்தமையாகும். அதாவது கிட்டு பற்றிய உண்மையான விடயத்தைத் தெரிந்துகொண்டும் அவை இந்தியாவைப் பகைக்க விரும்பாமல் மௌனம் சாதித்துள்ளன. இந்தியாவும் தனது தேசிய வல்லாதிக்க நலன் குறித்து எமது தளபதிகளை அழித்துவிட்டு நிற்கின்றது. இதன் ஒட்டுமொத்த விளைவுகள் என்ன? இனியென்ன நடக்கும்? உங்களுக்கு ஒன்று தெரியவேண்டும் - வெளிநாடுகள் எங்கும் ஒரு பெரிய ஆவேச அலையொன்று பரவுகின்றது. எங்கள் மக்கள் மத்தியில், வெளிநாடுகளில் இருக்கும் அமைப்புக்கள் மத்தியில் - இந்த நெருக்கடியை, இந்தியாவின் இத் துரோகச் செயலை - அம்பலமாக்கும் நோக்கத்தோடு கண்டனப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

''தமிழ்நாட்டில் இந்தப் பிரச்சனை பற்றிய உண்மையான தகவல் ஏதும் மக்களுக்குப் போகவில்லை. ஏதோ புலிக்கப்பல் ஒன்று தங்களது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கடல் எல்லைக்கு வந்து குழம்பிப் போய் நின்றது. அவர்களைப் பிடிக்கப் போனோம். அதற்கு முன்பாக அவர்களே தமது கப்பலுக்குத் தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள் என்பது போன்ற ஒரு பொய்ச் செய்தியை-புனைகதையை-பரப்பியுள்ளார்கள். ஆனால் லண்டனிலிருந்தும் பாரிசிலிருந்தும் தொலைபேசிமூலம் சில தமிழகத் தலைவர்களுக்கு விடயத்தைச் சொல்லியிருந்தோம். கிட்டுவின் சமாதானப் பயணத்தை இந்தியா தடுப்பதற்கு விடக்கூடாது என்று நெடுமாறன் போன்ற தமிழகத் தலைவர்களிடம் கேட்டிருந்தோம். ஆனால் இத் தலைவர்கள் இப்போது சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

"இந்நிலையில் எங்களுக்கு நியாயம் வழங்க எவருமே இல்லையா?, இந்த உலக சமுதாயம் இதைப் பார்த்துநிற்கிறதா?, என்று நீங்கள் கேட்பீர்கள். ஒன்றை மட்டும் நான் உங்களுக்குச் சொல்லலாம். அதாவது, இப்படி எங்களைப் போல எத்தனையோ ஒடுக்கப்பட்ட மக்கள் இனம், மிகவும் மிருகத்தனமாக நசுக்கப்பட்ட மக்கள் இனம், நீதிகேட்டுப் போராடும் மக்கள் இனம்-இவர்களை எல்லாம் காப்பாற்றுவது என்ன? இவர்களுக்கு நீதி வழங்கிக் கொடுப்பது என்ன? இது இந்தப் போராட்டங்களின் தார்மீக அடிப்படையே அன்றி வேறில்லை. நாங்கள் தர்மத்தின் அடிப்படையில், தார்மீகத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில் ஒரு போரை நடத்துகின்றோம். இந்த சத்தியம் தான் வரலாற்றுச் சக்தி. இந்தச் சத்தியம் தான் மனித வரலாற்றை நகர்த்தும் அற்புதமான சக்தி. இந்த ஆன்மீக அடிப்படையில்-தார்மீக அடிப்படையில்-நடத்திச் செல்லப்படும் எமது போராட்டம் இறுதியில் வெற்றிபெறும்; எத்தனை சக்திகள் இடைமறித்தாலும் இறுதி வெற்றி எமக்கே!"

❑

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கடலம்மா எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா?

-என். சண்முகலிங்கம்

நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும்-எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே
மூத்தமகன் கிட்டு அவன் தோழர் குட்டிசிறி
மலரவன் ஜீவா குணசீலன்
றொசாந்தன் நாயகன் தூயவன் நல்லவன் அமுதன்
இந்திய துரோகத்தால் கனலான செய்தியில்

நெஞ்சிலே ரத்தம் கொட்டும்
நினைவே நெருப்பாகும்-எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே

கடலம்மா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

தேசவிடுதலைக்காய் தேசமெல்லாம் திரிந்த-எங்கள்
நேசக் குழந்தைகளை நீசர் வழிமறிக்க

உலக கடற்பரப்பில் இந்தியப் பேயாட்சி
உண்மையைத் தின்னுமா? உலகம் மௌனமாகுமா?

தாயகப் பயணத்திலே தம்பி கிட்டு தோழருடன்
தியாக வேள்வியிலே தணலாகப் போகையிலும்

வானும் கடற்பரப்பும் உலகமதும் உள்ளவரை
தாயகத் தாகம் தணிவதில்லை-எந்த
தடையிலும் பயணம் நிற்பதில்லை

எங்கள் தம்பி கிட்டு தோழர் மீது ஆணையம்மா
எங்கள் தம்பி கிட்டு தோழர் தேசம் நாளையம்மா

நெஞ்சிலே ரத்தம் கொட்டும்
நினைவே நெருப்பாகும்-எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பிரபாகரனின் பெருந்தளபதி

- விடுதலைப்புலிகள், குரல் - 36

தீருவில். கடலென மக்கள். இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக்கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும் நிரவியும் மக்கள். நெஞ்சங்களில் கோபம், அழுகை, கண்ணீர். சோகத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எழுந்த சினம். அன்புக்குரியவனை இழந்து விட்ட தவிப்பு.

இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி. அதே தீருவில்.

கிட்டண்ணையும் அவர் தோழர்களும் கப்பலில்... படமாக... நம்பமுடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை.

தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.

அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன்தான். தேசம் அழுதது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மக்கள் கூட்டம் தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்து கையசைத்தது. உறுதியான அசைவு. கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை.

''தலைவன் இருக்கின்றான்'' கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு. சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி.

தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

''அடுத்ததாக, தளபதி கிட்டு அவர்கள் பேசுவார்!'' மக்களின் ஆரவாரம். ஆர்ப்பரிப்பு.

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு, உற்சாகம். அந்த ஆர்ப்பரிப்புக்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது; அப்படியே பதிந்தது.

''தலைவர் இருக்கிறார்; அவரை நம்புங்கள்'' ஒரு தூய உள்ளத்தில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத் தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கின்றது!''

* * *

கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடுகட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல.

தங்களுக்காகச் சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க எவருக்குமே காரணங்கள் தேவையில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கிட்டண்ணை சிறந்த ஒரு போராளி. வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர்; விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது.

மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம்; வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப்போனது கிட்டண்ணையின் காலத்தில் தான்.

"கோட்டையில இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம், அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.

'கிட்டர் நிற்கிறார்; இனிப்பயமில்லை.' மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு; மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும் அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை.

அந்தக் காலங்களில் தான் கிட்டண்ணை மக்களின் மனங்களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான - அழிவற்ற - வாழ்வு; கோபித்தாலும் சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு.

வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில் விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டுநடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது. கிட்டண்ணைக்கோ அப்படியில்லை. ஆனாலும் அந்த மாலை நேரங்களை அவர் விரும்பினார்.

அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவையில்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முடியப்பட்ட காற்சட்டைகளுடன் 'சிறிய கிட்டுகள்' நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் '357 மக்னம்' சுழற்துப்பாக்கியைப் போன்று இழு பட்டபடி வளைந்த தடி ஒன்று தொங்கும்.

கள்ளன் - பொலிஸ் விளையாட்டெல்லாம் மறைந்து புலிகள் - இராணுவ விளையாட்டுத் தொடங்கியிருந்தது.

விளையாட்டிலும் 'சின்னக் கிட்டுகள்' ஒரு நாளும் தோற்பதில்லை. வெற்றி; என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூடக் கிட்டு மாமா தோற் பதை அவர்கள் விரும்புவதில்லை.

இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந் தார். அதனால் தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்தினருடன் நடந்த சண்டையொன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகிச் சில நாட்கள் சென்றிருந்தன.

அப்போதுதான் தேசவிரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டு எறியப்பட்டது.

குண்டு வெடித்தது தெரியும். ஆனால், கிட்டண்ணைக்கு என்ன நடந்தது என்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது. தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது. மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார் கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவித்தது.

உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனாலும், கவலை முற்றாகத் தீரவில்லை. ஏனெனில் கிட்டண்ணை ஒரு காலை இழந்திருந்தார்.

1987 மேநாள், மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்.

"கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்" மக்கள் முகங்களில் மகிழ்ச்சி; கிட்டண்ணையைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆவல்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிட்டண்ணை பேசினார். தரமானதொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு.

அன்று மக்களிடையே உற்சாகமும் மகிழ்ச்சியும் கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.

* * *

கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறுகணம் எங்கென்று தெரியாது மறைந்துவிடும் கோபம்.



**அண்ணனுக்குத் தம்பியாகி அருகில் நின்றவன் — களம் ஆடியெங்கள் தாயகத்தில் பகையை வென்றவன்.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும், ஒருவரும் கோபிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதுமில்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள் இருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.

சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவது தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும் அவர்கள் கண்டவர்கள். அதனால் தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானதே. இயக்கத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது.

கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும் திறமையும் மனிதர்களை வென்றன.

குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொதுவாகத் தவறுவதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களூர்ப் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பெருமை. ஆபத்தான வேளைகளில்கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைகளின் போது தேவையற்ற துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒரு போதும் செய்ததில்லை.

இதெல்லாவற்றிற்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கின்றது.

உமையாள்புரம். நிலக்கண்ணிகளைப் பொருத்தி விட்டு இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது.

கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாத காலம். இராணுவ வண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெடித்தன.

புலிகள் வெவ்வேறு திசைகளால் பின்வாங்கினார்கள், அல்லது தப்பி ஓடினார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வீதிக்கு அருகாகத் தண்டவாளம் இருந்தது. அதன் இரு பக்கமும் வெட்டை.

கவச வாகனங்கள் இரண்டு துப்பாக்கி ரவைகளை அள்ளி வீசிக் கொண்டு நெருங்கி வந்தன.

ஒருசிலர் விழலாம் என்ற நிலை. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி தனது ஜி-3 துப்பாக்கியால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார். தவாறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ் வாகனம் துரத்தி வந்த வேகத்திற்குச் சரிந்து புரண்டது.

அவரது முதலாவது களமும் சாதனை தான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொரு களமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது; பகைவர்களைக் கலங்கடித்தது.

கிட்டண்ணை சிறந்ததொரு வீரன். அதைப் போன்றுதான், கமரா வைத் தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன். அது தொலைக் காட்சிக் கமராவாக இருந்தாலும் சரி...

சிறந்ததொரு இலக்கியவாதி-எழுத்தாளன். போராளிகள் தொடர் பாக, போர்முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக உள்ளத்தைத் தொட்டுவிடும் உணர்வோடு அவரின் எழுத்துக்கள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும் நிதர்சன தரிசனமும் அவர் எழுத்துக்களில் பரவிவிழும். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் உயிர் போன்ற மக்கள் மீதான நேசம் அவர் எழுத்துக்களில் பரிணமிக்கும்.

* * *

சரி, இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழந்துதான் போனோமா? உண்மைதான். ஏற்றுக்கொள்ளமுடியாத தெளிவான உண்மை.

"நாம் ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம் தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரிச்சயமானது. சாவைச்

Tamileelam Archive

சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்றுதான் நாம் இறுமாந் திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்த போது எம் இதயம் உருக்குலைந்து, தளர்ந்து... எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்?" - மேஜர் அல்பேட்டின் இழப்பை அடுத்து அவரைப்பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.

நாங்கள் கூட ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில் எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று ஆயிரக் கணக்கான தோழர்களை நாம் இழந்துவிட்டோம். எங்கள் இதயங்கள் பல முறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புகளைத் தாங்க முடிவதில்லையே! அதிலும் கிட்டண்ணையை...!

'கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்துவிட்டார்களாம்' - நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி. 'இந்தியர்கள் விடமாட்டார்கள். அதுவும் கிட்டண்ணயை நிச்சயமாக விடமாட்டார்கள்.'

'அணு அணுவாகத் திலீபன் சாகும்வரை பார்த்துக்கொண்டிருந்த இந்தியா; தமிழர்கள் துடிக்கையிலும் புலேந்தி அம்மானையும் குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரணவலைக்குள் சிக்கிவிட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது.' தெரிந்த செய்திதான். ஒவ்வொரு வரின் மனமும் சொன்ன செய்தி.

அவர்களுக்குத் தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எதுவும் அமுக்கப்படவேண்டும்; அழிக்கப்படவேண்டும். அதற்காக அவர்கள் என்னவும் செய்வார்கள்.

சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசிற்குத் தேவையற்றன. அதை மாற்றவும் திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும் மனச்சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வர்க்கத் திற்கு இயல்பாகவே இல்லை.

சரணடைவதா! அது புலிகளின் மரபு இல்லை. அதுவும் கிட் டண்ணை! தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி-

Tamileelam Archive

தமிழர்களின் மானச்சின்னம் - அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன் - தலைகுனிவது... சித்திரவதைப்பட்டு, அவமானப்பட்டு சாவது...

'கிட்டண்ணை காப்பாற்றப்பட வேண்டும்.' தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக்கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

"எமது சிறிய படகு அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால், பாரிய நேவிப்படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக்கொண்டு பாய்ந்து வருகின்றன.

"அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச் சீறிக்கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.

"ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.

"நேவிப்படகிலிருந்து பாய்ந்து வந்த 'ரேசர் ரவுண்ஸ்' ஒன்று எமது படகின் எரிபொருள் தாங்கியைத் துளைக்க... படகு தீப்பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகிறது.

"பருத்துத்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப் படுவதை அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பி வரும் என்று பார்த்துக் கொண்டிருக்க, எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.

"ஆனால், செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை; கடல்."

பல வருடங்களுக்கு முன்பு சிறிலங்கா கடற்படையால் எமது தோழர் கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்டபொழுது, 'திரை கடல் ஓடினோம் - திரவியம் தேடி அல்ல' என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார். ஆனால் இன்று... நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக் கப்பிடிக்குள் கிட்டண்ணை... நாங்கள் செல்லமுடியாது. ஏன்?

கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க் கப்பல்கள். சரணடைய வேண்டும்; அல்லது அந்தப் பாரிய போர்க் கப்பல்கள், சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை

Tamileelam Archive


மூழ்கடிக்கும். பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க் கப்பலைத் தாக்க வந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.

இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின் மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும்.

'சரணடையப் போவதில்லை.' சாவு நிச்சயமாகிப்போனது. ஆனால், அந்தச் சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்க வேண்டும்; சரித்திரம் படைக்க வேண்டும்; தாய் நிலத்தைத் தலைநிமிரச் செய்ய வேண்டும்.

சண்டைக்களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற நூற்றுக்கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று...

குட்டி சிறி அருகில் நின்றான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரிய



*அவர் கோபிப்பார். அது தேவையானது. அவரது கோபத்தை விட அவருக்குள்ளிருந்த கனிவுதான் மனிதர்களை வென்றது.*

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.

அவன் அழுதிருப்பான்; தனக்காக அல்ல, கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒருபோதும் கலங்கியவனில்லை.

இப்போது கலங்கி இருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லாரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப்பேய்கள் இறங்கி வரப்போவதில்லை.

எங்கள் தொலைத் தொடர்புக் கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக் கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி-கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன்-

சாவின் விளிம்பில்...

முடிவு உறுதியாகியது. ஒரு கணத்தில் கப்பல் சிதறும்; காணாமற் போகும்.

கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள்.

தேசம், அம்மா, அண்ணண், அன்பான மனைவி, தன்னில் உயிரை வைத்திருக்கும் தலைவன் எல்லோருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒரு கணம் வந்து விட்டுச் சென்றிருக்கலாம்; ஆனால் வெளித் தெரியாது.

விடைபெற்றிருப்பார்கள்-தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து...

கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத்தொடர்புக்கருவி நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா... வருகிறதா...

'கிட்டண்ணையை இழந்து விட்டோம்'

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது; தவித்தது; கதறி அழுதது; ஒரு கணம் தயங்கி நின்றது.

தாங்க முடியாத இழப்பு.

எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்கமுடியாத இழப்புக்கள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் 'தலைவன் இருக்கிறான்' எனத் தொடர்ந்து செல்லும்.

அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வஞ்சகரால் எங்களது குயில் மடிந்ததோ

- தமிழவள்

வல்வைக் கரையெழுந்த புயல் ஓய்ந்ததோ?
வண்ணத் தமிழீழ மலை சரிந்ததோ?
வங்கக் கடல்மடியில் புலி தவித்ததோ?
வஞ்சகரால் எங்களது குயில் மடிந்ததோ?

சிங்களத்துப்படை கலங்கும் நாமம் கொண்டவன்
சிந்தனையில் ஈழமக்கள் வாழ்வைக் கண்டவன்
சிறுமலர்கள் இதயமதில் சிரித்து நின்றவன் - சினம்
கொண்டெழுந்து தன்னுயிரைத் தானே தகர்த்தவன்.

நெஞ்சமதில் விடுதலைத்தீ ஏந்தி நின்றவன் - தலைவன்
கனவுகளின் உருவெடுத்து களங்கள் வென்றவன்
இரக்கமற்ற கொடியவரின் நினைவ றிந்தவன் - வந்த
கப்பலோடு தான் எரிந்து மானம் காத்தவன்

வெங்களங்க ளாடியவெம் வேங்கை வீழ்ந்ததால்
வேதனையில் இதயமெலாம் வெந்து போகுதே
வீரமுள்ள தளபதியை இழந்து போனதால் - எங்கள்
நெஞ்சமெல்லாம் தவித்தவனைத் தேடிநிற்குதே!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சகலகலாவல்லவன்; சாதனை வீரன்

–இளங்குமரன்

1979 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கிட்டு தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்டபோது, இயக்கத்தில் சில பத்து உறுப்பினர்கள் தான் இருந்தனர். சதாசிவம் கிருஸ்ணகுமாராக இயக்கத்தில் இணைந்தவனுக்குத் தொடக்கத்தில் வெங்கிட்டு எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆயினும் கிட்டு என்றே இயக்கத் தோழர்கள் அழைத்ததால் கிட்டு என்ற பெயரே அவனுக்கு நிலைத்துவிட்டது. துடிப்பு மிக்க இளைஞனான கிட்டு, இயக்கத்தில் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் நேரடியாக ஆயுதப்பயிற்சி பெற்ற வீரர்களில் ஒருவன். அது மட்டுமின்றி இயக்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாடுகள் பற்றி, இயக்க வீரர்கள் செயற்படுவது எப்படி என்பது பற்றி, அரசியல் பற்றி, மக்களோடு பழகுவது பற்றி, உலக விடுதலை இயக்கங்கள்–விடுதலைப் போராட்டங்கள் பற்றி எல்லாம் தலைவரின் அறிவுரைகள், எண்ணங்களை நிறையப் பெறும் வாய்ப்பையும் கிட்டு பெற்றிருந்தான்.

எதையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற பேரார்வம், சொல்பவற்றை எளிதில் உடனடியாகப் புரிந்துகொள்ளும் தன்மை, அச்சம் சிறிதுமற்ற தன்மை, எடுத்த செயலை நிறைவாக முடிக்கும் தன்மை போன்ற அவனிடம் இயல்பாகவே இருந்த–இயக்கவீரனொருவனுக்கு

Tamileelam Archive

வேண்டிய-திறமைகளைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் நன்கு அறிந்துகொண்டார்.

தலைவர் பிரபாகரன் மீது பெருமதிப்பும் பேரன்பும், இயக்கத்தின் கொள்கை செயற்பாடுகளில் நிறைவான தெளிவும் பெற்றிருந்த 19 வயது இளைஞனான கிட்டுவிடம், துடிப்பான இளைஞர்களிடம் இயல்பாகவே இருக்கும் குறும்புத்தனமும் இருந்தது. 1979 இல் தலைவர் பிரபாகரன் அவர்கள் இயக்கப் பணியின் பொருட்டுத் தமிழகம் சென்றிருந்த வேளையில், இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்த கணேசனால் (ஐயரால்), இயக்க உறுப்பினர் ஒருவனுக்கு அடித்துவிட்டான் என்பதற்காகக் கிட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

தமிழகத்திலிருந்து திரும்பி வந்த தலைவர் பிரபாகரன் அவர்கள் கிட்டுவின் ஆற்றல்கள், திறமைகள், இயல்புகளை நன்றாகத் தெரிந்து வைத்திருந்ததால் உடனடியாகக் கிட்டுவை அழைத்து மீண்டும் இயக்கத்தில் இணைத்துக்கொண்டார்.

தலைவர் அவர்கள் கிட்டுவின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் வீண்போகவில்லை. 1981 நீர்வேலி வங்கிக்கொள்ளை தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு, தலைமறைவாகித் தமிழகம் சென்று 82 இல் திரும்பிய கிட்டு, 1983 மார்ச் 4 ஆம் நாள் அற்புதன் தலைமையில் இயக்கம் மேற்கொண்ட உமையாள்புரம் தாக்குதலின்போது தன் தனி ஆற்றலைக் காண்பித்து, தலைவரினதும் இயக்க வீரர்களினதும் பெருமதிப்பைப் பெற்றான்.

அதையடுத்து 1983 ஏப்ரில் 7 ஆம் நாள், கிட்டு இயக்கத்தின் தாக்குதல் குழுவின் இரண்டாவது பொறுப்பாளராகத் தலைவர் பிரபாகரன் அவர்களால் அமர்த்தப்பட்டான்.

அதன்பின் நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தல் பகிஸ்கரிப்பின் போது கந்தர்மடம் வாக்குச் சாவடியில் இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதல், ஜுலை 23 இல் திருநெல்வேலியில் இராணுவ வண்டிகள் மீதான தாக்குதல் போன்றவற்றில் கிட்டு தன் தனி ஆற்றலைக் காட்டினான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

1983 பிற்பகுதியில் இந்திய அரசு வழங்கிய பயிற்சி பெறச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவுக்கு, இரண்டாவது பொறுப்பாளராகத் தலைவர் பிரபாகரன் அவர்களால் அமர்த்தப்பட்டான். அந்தப் பயிற்சியின்போது ஆயுதங்களைக் கையாள்வதில் கிட்டு காட்டிய துரிதமும் திறமையும் இந்தியப் பயிற்சியாளர்களை வியக்கவைத்தது.

பயிற்சியை முடித்துத் தமிழீழம் வந்த கிட்டு, 24-2-84 அன்று யாழ். குருநகர் இராணுவ முகாமின் கட்டடங்களைத் தகர்த்ததுடன் இயக்கம் மேற்கொண்ட பல்வேறு தாக்குதல்களில் தன் திறமையையும் வீரத்தையும் காண்பித்தான். 1985 இல் கப்டன் பண்டிதர் வீரச்சாவடைந்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத் தளபதியாகிய கிட்டு, வடமாகாணத்திலேயே பெரிய பொலிஸ் நிலையமாகத் திகழ்ந்த யாழ். பொலிஸ் நிலையக் கட்டடங்களைத் தகர்த்து, நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும் ஆயிரக் கணக்கான ரவைகளையும் பல ஆவணங்களையும் கோப்புகளையும் கைப்பற்றி, பொலிசாரை விரட்டியடித்தான்.

அதன்பின் தளபதி கிட்டு இராணுவ முகாம்களை முற்றுகையிட்டு இடைவிடாது படிப்படியாக மேற்கொண்ட தாக்குதல்களினால், சிங்களப் படை முற்றாக முகாம்களுக்குள் முடக்கப்பட்டு, யாழ்ப்பாணம் விடு தலைப்புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. தளபதி கிட்டுவின் ஆற்றல், திறமை, உழைப்பு, எதற்கும் அஞ்சாத வீரம் என்பனவே-இன்று போலன்றி-ஆள்வலு, ஆயுதவலு போன்ற வசதிகள் குன்றியிருந்த காலத்திலும் கூட அவன் பெருவெற்றிகளைக் குவிக்கக் காரணமாக அமைந்தன. அக்காலத்தில் எதிரிகளினது பயங்கரவாதச் செயல்களை மட்டுமன்றி இனத் துரோகிகளின் சதிச் செயல்களையும் சமூகவிரோதிகளின் அடாவடித்தனங்கள் போன்றவற்றையும் எதிர் கொண்டு ஈடுகொடுத்தான்; தளபதி கிட்டு தன் அருஞ்சாதனைகளையும் படைத்தான்.

தளபதி கிட்டு தனது ஆற்றலையும் திறமையையும் இராணுவ நடவடிக்கைகளோடு நிறுத்திக் கொள்ளவில்லை. குடாநாட்டில் சிங்களக் காவல்துறை முற்றாகச் சீர்குலைக்கப்பட்டதையடுத்து யாரும் கேட் பாரற்ற முறையில் பெருகிய சமூக விரோதச் செயல்களையும் சட்ட

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மீறல்களையும் தடுத்து நிறுத்தக் கிராமிய நீதிமன்றங்களை ஏற்படுத்தினான். சமூக ஒழுக்கமீறல்கள், பண்பாட்டுப் பிறழ்வுகள் ஆகியவற்றுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டான். சிறீலங்கா அரசின் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு, யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்ததைத் தொடர்ந்து, சிறீலங்கா அரசு பொருளாதாரத் தடையை மேற்கொண்டதையடுத்து, தளபதி கிட்டு கிராமிய உற்பத்திக் குழுக்களை அமைத்து உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தான். இயக்கத்தினூடாகச் சவர்க்காரத் தொழிற்சாலைகள், தும்புத் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளையும் விவசாயம், கோழி, கால்நடைப் பண்ணைகளையும் விற்பனை நிலையங்களையும் நியாயவிலைக் கடைகளையும் ஏற்படுத்தினான்.

போராட்டச் சூழ்நிலையில் சிறுவர்கள் குழந்தைகளின் மனநிலை பாதிப்புறா வண்ணம், சிறுவர்களின் பொழுதுபோக்குக்காகப் பல சிறுவர் பூங்காக்களை உருவாக்கினான். மக்கள் மனதில் விடுதலை உணர்வை விதைப்பதற்காக வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, நாடகம் எனப் பல கலை நிகழ்ச்சிகளை ஊக்குவித்தான். 'நிதர்சனம்' தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் போராட்ட முனைக்கு நேரடியாக மக்களை அழைத்துச் சென்றான். சிறுவர்க்கான கலைநிகழ்ச்சிகள், கார்ட்டூன்கள் போன்றவற்றையும் ஒளிபரப்பவைத்தான்.

இயக்க நடவடிக்கைகள் அனைத்திலும் வெற்றிகள் குவிக்கப்பட்ட வேளையில், விடுதலைப்புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவ வீரர்களை விடுவிக்க எனப் பேச்சுவார்த்தை நடத்தவந்த சிங்கள அரசியல் தலைவர்களோடும் பௌத்த பிக்குகளோடும் உரையாடி, பேச்சுவார்த்தை நடத்தி, விடுதலைப் புலிகளின் நடவடிக்கையின் நியாயத்தை அவர்களுக்கு உணர்த்தி அனுப்பினான்.

1986 ஆம் ஆண்டு நொவெம்பர் 10ஆம் நாள், விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவத்தினர் இருவரைப் பார்ப்பதற்கும் அவர்களை விடுவிப்பது தொடர்பாகப் பேசுவதற்குமெனக் கொழும்பிலிருந்து வந்த கேணல் ஆனந்தவீரசேகரா, யாழ். கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலை ஆகியோரை வரவழைத்துத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனது இடத்தில் வைத்துச் சந்தித்து உரையாடி, விடுதலைப் புலிகளின் நிலையை எடுத்துக்கூறி சிங்கள இராணுவ உயரதிகாரிகளுக்கு தான் சளைத்தவன் அல்லன் என்பதை மெய்ப்பித்தான்.

1986 நொவெம்பரில் தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழ் நாட்டில் இந்திய அரசுக்கு எதிராகச் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட போது, இந்திய நயவஞ்சகச் செயலுக்கு எதிராகத் தமிழீழ மக்களை அணிதிரட்டி மிகப்பெரிய கண்டனப் பொதுக்கூட்டத்தையும் வரலாறு காணாத வகையில் எழுச்சியுடன் நடத்திக் காட்டினான்.

இனத்துரோகிகளினதும் சமூகவிரோதிகளினதும் அடாவடித்தனங் களை அடக்குவதில் முனைப்பாக நின்றதால் பல இடர்களைத் தளபதி



ராஜதந்திரம்: கைதிகள் பரிமாற்றம் தொடர்பான சிங்களப் படை அதிகாரிகளுடனான பேச்சுக்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிட்டு எதிர்நோக்கவேண்டியிருந்தது. 1987 மார்ச் 23 ஆம் நாள், இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த யாழ். தொலைத்தொடர்பு நிலைய முகாம் மீது தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய ஒரு வாரத்தில், சமூகவிரோதக் கும்பல் மறைந்திருந்து மேற்கொண்ட குண்டுவீச்சில் தளபதி கிட்டு தனது இடதுகாலை இழந்தான். முகாம்களுக்குள் முடக்கப்படுவதற்கு முன்பும் முடக்கப்பட்டபின்பும், அரசபடைகள் முகாம்களுக்குள் இருந்தபடி மேற்கொண்ட செல் தாக்குதல்களாலும் விமானக் குண்டுவீச்சாலும் வீடுகள், வியாபார நிலையங்கள் பாதிக் கப்பட்ட வேளைகளிலெல்லாம் தளபதி கிட்டு அந்த இடத்திற்கு விரைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவத் தவறுவதில்லை. அரசபடைகளின் பயங்கரவாதங்களிலிருந்து மக்களைக் காத்த தளபதி கிட்டுவின் மீது மக்கள் தமது அன்பையும் பாசத்தையும் பொழிந்தனர்.

விமானக் குண்டுவீச்சுக்களையும் ஹெலிக்கொப்டரின் துப்பாக்கிச் சூட்டையும் பொருட்படுத்தாது, 1987 ஆம் ஆண்டு மே நாளில் நடை பெற்ற விடுதலைப்புலிகளின் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும், காலிழந்த தளபதி கிட்டுவை முதற்தடவையாகப் பார்த்துவிட வேண்டும் என்னும் துடிப்பில் சிறுவர், பெண்கள், முதியோர், இளைஞர் என்ற வேறுபாடின்றி லட்சக்கணக்கில் அணிதிரண்ட மக்கள் வெள்ளம் வெளிப்படுத்திய ஆவலும் துடிப்பும் தளபதி கிட்டுவின் மீது மக்கள் எத்தகைய ஆழமான மதிப்பை, அன்பை, பாசத்தை வைத்திருந்தனர் என்பதை எடுத்து விளக்குவதாக இருந்தது.

தளபதி கிட்டுவின் கைகளில் ஆயுதங்கள் மட்டுமன்றி எழுதுகோலும் திறமையாகவே கையாளப்பட்டது. தமிழ்மக்களைப் படுகொலைசெய்தும் மக்கள் சொத்துக்களைச் சூறையாடியும் அழித்தும் வந்த சிங்கள இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கிவைத்து, மக்களையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாத்தவேளையில், எதிரிகளினதும் இனத்துரோகக் கும்பல்களினதும் அவதூறுகள், பழிகளை நீக்கி உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் 'களத்தில்' என்ற இயக்கச் செய்தி இதழைத் தொடங்கிய தளபதி கிட்டு, அதிலும் தன் தனி ஈடுபாட்டை மேற்கொண்டான். பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து மக்களை அடிக்கடி நேரடியாகச் சந்தித்தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தனது காலுக்குச் சிகிச்சை பெறத் தமிழ்நாடு சென்ற தளபதி கிட்டு, தமிழ் மக்கள் மீது இலங்கை-இந்திய ஒப்பந்தம் திணிக்கப்பட்டு இந்தியப்படை-விடுதலைப்புலிகள் போர் தொடங்கியதையடுத்து, இந்திய அரசினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டான். வீட்டுக்காவலில் இருந்த காலத்தில், விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் இந்திய அரசுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்குத் தொடர்பாளனாகச் செயற்படும் நிலை தளபதி கிட்டுவுக்கு ஏற்பட்டது.

தளபதி கிட்டு இந்திய அரசின் பிடியில் இருந்த வேளையிலும் இந்திய உளவுத்துறையினர், காவல்துறையினர் விடுதலைப்புலிகள் இயக்கத்தினதும் தமிழீழ மக்களினதும் நலன்களுக்கு எதிரான வகையில் திட்டங்கள், எண்ணங்களை முன் வைத்த வேளைகளில் அவற்றைக் கடுமையாக எதிர்த்தான். இந்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்திய தொலைக்காட்சிக்குச் சமாதான முயற்சி தொடர்பாக பேட்டி அளிக்கும்படி இந்திய உளவுத்துறையினர் தொலைக்காட்சி நிலையச் செய்தியாளர்களை அழைத்து வந்தபோது, அமைதி முயற்சி பற்றி இயக்கம் கொண்டிருந்த நிலைக்கு மாறாகப் பேட்டி கொடுக்க முடியாது என, எதுவித தயக்கமுமின்றி அவர்களைத் திருப்பி அனுப்பினான் தளபதி கிட்டு.

தளபதி கிட்டு தமிழகத்திலிருந்த நாட்களில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களை, அரசியல் தலைவர்களை, கலைஞர்களை, தமிழறிஞர்களை, பேராசிரியர்களை, பத்திரிகையாளர்களை எல்லாம் அடிக்கடி அழைத்துப் பேசித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் நியாயத்தையும் எடுத்து விளக்கி, அவர்களின் ஆதரவையும் உதவிகளையும் பெற்றான்.

தளபதி கிட்டு தமிழகத்தில் வீட்டுக் காவலில் இருந்த போது, காவல் கடமையில் இருக்கும்-தன்னைச் சந்திக்கவரும்-பொலீசாரிடம் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி எடுத்துரைக்கத் தவறுவதில்லை.

தளபதி கிட்டு தமிழகத்தில் இருந்த காலத்தில் 'தமிழீழம்' என்ற, இயக்கத்தின் மாத இதழ் ஒன்றைத் தொடங்கி அதற்கான பல ஆக்கங்களையும் தானே எழுதி, கைதாகிச் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

படும் வரை ஏழு இதழ்களையும் வெளியிட்டான். ஏழாவது இதழின் ஐயாயிரம் படிகள் பொலீசாரால் கைப்பற்றப்பட்டன.

கைதாகிச் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட வேளையில் கூடத் தளபதி கிட்டு உள்ளிருந்தபடியே, வெளியே தலைமறைவாகியிருந்து செயற்பட்ட இயக்க வீரர்களுக்கு உரிய வேலைகளை வழங்கி, அவர்களிடமிருந்து அறிக்கைகளையும் பெற்று ஆராயத் தவறவில்லை.

சிறையிலிருந்தபடியே அன்று இந்தியப்பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு தளபதி கிட்டு கடிதம் எழுதினான். தளபதி கிட்டு சிறையில் இருந்த வேளையில் தான், தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தேவி' வாரஇதழில், தமிழீழ விடுதலைப்போராட்டம் தொடர்பான தளபதி கிட்டுவின் நீண்ட கட்டுரைத் தொடர் வெளிவந்தது

சிறையில் இருந்த வேளையில், தன்னை விடுவிக்குமாறும் அன்றேல் தமிழீழத்திலுள்ள விடுதலைப்புலிகளிடம் தன்னைச் சேர்ப்பிக்குமாறும் கோரி, சென்னை மத்திய சிறையிலேயே தளபதி கிட்டு காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டான். தமிழக மக்கள் கொதித்தெழுந்து விடுவார்கள் என்று அஞ்சிய இந்திய அரசு, தளபதி கிட்டுவின் போராட்டத்திற்கு அடிபணிந்து, அவனைத் தமிழீழத்திற்குக் கொண்டு வந்து விடுதலை செய்தது.

இந்திய - விடுதலைப்புலிகள் போராட்டம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த வேளையில், தளபதி கிட்டு வன்னிக்காட்டுக்குச் சென்று, தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து அங்கிருந்தபடி இயக்கப்பணிகளில் ஈடுபட்டான்.

1989 இல் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடந்த வேளையில் பேச்சுவார்த்தைக்கெனக் கொழும்பு சென்ற தளபதி கிட்டு, அங்கிருந்து இங்கிலாந்து சென்று, அங்கிருந்து விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாளனாகச் செயற்பட்டான். வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளனாக இருந்து செயற்பட்ட 3 ஆண்டுகளில் தளபதி கிட்டு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை; எடுத்து உரைக்க இயலாதவை. வெளிநாட்டுப்பொறுப்பாளராகத் தளபதி கிட்டு பொறுப்பேற்றதும் அதுவரை மந்த நிலையிலிருந்த செயற்பாடுகள் துரிதமாகின. வெளி

நாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்க ஆதரவாளர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தான்.

வெளிநாட்டிலிருந்த வேளையிலும் தமிழகத்திலிருந்து செயற்படுவது போல ஒவ்வொரு சிக்கலுக்கும் நெருக்கடிக்கும் எப்படி எப்படி நடந்தால் சிக்கல்களைத் தீர்க்கலாம்... நெருக்கடிகளிலிருந்து விடுபடலாம்... என்று தமிழீழத்தில் இயங்கிய தோழர்களுக்கு அறிவுறுத்துவதற்குத் தளபதி கிட்டு தவறவில்லை.

தளபதி கிட்டு வெளிநாடுகளில் இருந்து செயற்பட்ட காலத்தில்கூட தமிழீழத்தை, இயக்கத்தை, இயக்கத்தலைவரை எவ்வாறு நேசித்தான்; போராளிகளின் நலன்களில் எத்தகைய அக்கறை கொண்டிருந்தான்; தமிழீழப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப, தமிழீழச் சிறுவர்களின் நலன்களைக் காக்க, தமிழீழ மக்களின் இடர்கள், இன்னல்களைக் களைய எத்தயை ஆர்வத்தை, அவாவினைக் கொண்டிருந்தான் என்பதற்கு அவன் எழுதிய மடல்களே சான்றுகளாகத் திகழ்கின்றன.

தளபதி கிட்டுவினது அயராத உழைப்பும், அஞ்சாத தீரமும், உள் ளார்ந்த செயற்பாடும் எதிரிகளும் வியக்கின்ற வகையில் - மதிக்கின்ற வகையில் - அமைந்திருந்தன.

1987 ஒகஸ்டில் இந்தியாவின் தலைநகர் டெல்லியிலிருந்து தலைவர் பிரபாகரன் அவர்களைச் சென்னைக்கு அழைத்து வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் 'கறுப்புப் பூனைகள்' பலர், சென்னையில் தளபதி கிட்டுவைக் காண்பதில் காட்டிய ஆர்வம், கிட்டுவின் செயற்பாடுகள் வெளியுலகமறியுமளவிற்கு வளர்ந்திருந்தன என்பதை உணர்த்தும் வகையில் இருந்தது.

மக்களோடு பழகுவதில் தளபதி கிட்டு கொண்டிருந்த அணுகுமுறை அவனை மக்கள் தலைவனாக ஆக்கியது. 19 வயது இளைஞனாக இயக் கத்தில் இணைந்த தளபதி கிட்டு, சாதாரண வீரனாகக் களத்தில் இறங்கி நடத்திக்காட்டிய வீரச் செயல்களும், அவனது அஞ்சாத வீரமும் தான் அவனை மத்திய குழு உறுப்பினனாக, மாவட்டத் தளபதியாக, வெளி நாட்டுப் பிரிவுப் பொறுப்பாளனாக, கேணலாக உயர்த்தி வைத்தன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராட்டக் களத்தில் மட்டுமன்றி அரசியல் அரங்கிலும், பொருளாதார முனையிலும், சமூகப் பணியிலும், இயக்கநலன் காப்பதிலும், மக்கள் ஆதரவையும் அன்பையும் பெறுவதிலும் எமது மூத்த தளபதி கேணல் கிட்டு கொண்ட ஈடுபாடும், பெற்ற வெற்றிகளும் மக்கள் நினைவிலிருந்து என்றுமே அகலாது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதிக பக்கங்கள் கேணல் கிட்டுவினதாகவே இருக்கும் என்பது திண்ணம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# உலகம் எப்போது ஊமையானது!

-புதுவை இரத்தினத்துரை

''அசோகச்சக்கரம்'' குருதியில் குளித்தது.
''வங்கமாகடல்'' தீயினில் கொதித்தது,
''இந்திய வல்லூறு'' களின்;
கூரிய அலகுகள்;
''ஒலிவ்'' தளிர் சுமந்து வந்த;
வெள்ளைப் புறாக்களை,
எப்படிக் குதறலாம்?
''கிட்டுவும் குட்டி சிறியும்
எட்டு வேங்கைகளும்''
''வேடந்தாங்கல்'' தேடிவந்த,
வெளிநாட்டுப் பறவைகள் அல்ல...
தங்கள் கூடு திரும்பிய குருவிகள்.
''கோட்சே'' கூட ,
தன்னை நியாயப்படுத்தினான்.
சிலர் ஏற்றும் கொண்டனர்.
இந்திய அரசே!
முக மூடி இழந்துபோன;
உன் ஆதிக்க முகத்தையும்,
அகோரப் பற்களையும்;
எந்த முந்தானையால் மூடப்போகிறாய்?
ஆசியக் கடலுக்குள்,
அகலக்கால் பரப்ப;
உன்னை அனுமதித்தது யார்?
கேட்க யாருமே இல்லையா?
உலகம் எப்போது ஊமையானது!

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கிட்டண்ணா:
# பன்முகப்பட்ட ஆளுமையின் கூட்டு வடிவம்

– கஸ்ரோ

ஒரு முறை லண்டனிலிருந்து வெளியாகும் 'களத்தில்' பத்திரிகையினைத் தலைவருக்குக் காட்டிய போது, "இது கிட்டு தான் செய்யிறான் போல கிடக்கு; இல்லாட்டி இப்படி வராது, வேணுமெண்டால் விசாரிச்சுப் பார்" என்று கூறினார். ஏனென்றால் அது அவ்வளவு தரமாக இருந்தது. அதனது ஒவ்வொரு பக்கமும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டுப் படங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்றன உரிய இடங்களில் போடப்பட்டு, மெருகூட்டப்பட்டு இருந்தது. நிச்சயமாகக் கிட்டண்ணைதான் இதற்குப் பின்னாலிருக்கிறார் என்று தெரிந்தாலும், வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் மூலம் இதனை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

சிகிச்சைக்காகக் கிட்டண்ணா இந்தியாவிற்குச் சென்றபோது கூட அவரால் வெறுமனே கையைக் கட்டிக்கொண்டு இருக்க முடியவில்லை. இந்திய இராணுவம் தமிழீழத்தில் புரிந்த கொடுமைகளை நூல் வடிவில் அம்பலப்படுத்திக்கொண்டிருந்தார். இந்நூல்கள் அச்சடிப்பது தொடர்பான வேலைகளை, ஒரு போராளியிடம் ஒப்படைத்திருந்தார். ஒவ்வொரு

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

நாளும் அந்தப் போராளியிடம் நூல்கள் எந்த நிலையில் உள்ளது என்பதைக் கவனமாகக் கேட்டறிவார். அத்துடன் அச்சடித்த பக்கங்களைப் பார்த்து அதிலுள்ள பிழை திருத்தங்களைக் கூறுவார். ஒருமுறை நான் கிட்டண்ணாவின் இடத்திற்குப்போன போது அந்தப் போராளிக்குக் கடும் பேச்சு விழுந்து கொண்டிருந்தது. 'தெரியாமல் இதுக்குள்ளே போய் மாட்டுப்பட்டு விட்டன்' என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே, ''இவன் பிறசைப் (press) பற்றி எனக்குச்சொல்லுகிறான்'' என்றார் என்னைப்பார்த்தபடியே. கிட்டண்ணா நூல் ஒன்றைக் குறிப்பிட்ட திகதிக்குள் அச்சடித்து முடிக்க வேண்டும் என்று அந்தப் போராளியிடம் கூறியிருந்தார். குறிப்பிட்ட திகதிக்கு அச்சடிக்க முடியாமல் போனதால் ஏதோ வியாக்கியானங்களை அந்தப் போராளி கிட்டண்ணாவிற்குச் சொல்லிக்கொண்டிந்தான். கிட்டண்ணாவிற்கு அச்சடிக்கும் தொழில் மாத்திரமல்ல, எந்தவொரு விடயத்திலும் பிழையான காரணம் கூறித் தப்ப முடியாது என்று எனக்கு நன்கு தெரிந்திருந்தது. 'விசயம் விளங்காமல் கதைக்கிறான் மடையன்' என்று நினைத்துக்கொண்டிருக்கும் போதே அந்தப் போராளியை அழைத்து, அவன் சொன்ன வியாக்கியானங் களுக்குச் சரியான விளக்கங்களைக் கூறிவிட்டு, ''நாளைக்கிடையிலே அடிச்சுக்கொண்டு வாறாய்'' என்று அவனை அனுப்பினார்.

''நீ கடைசியாக வந்த 'இந்தியா ருடே' (India Today) யினைப் பார்த் தனியோ?'' என்று என்னைக் கேட்டார். எதனை மனதில் வைத்துக் கொண்டு கேட்கிறார் என்று தெரியவில்லை. 'பிடிபடப்போகிறேனே' என நினைத்துக்கொண்டே ''ஓம்'' என்றேன். குறிப்பிட்ட விளம்பரம் ஒன்றின் பெயரைக்கூறி ''அதைப்பார்த்தியா?'' என்று கேட்டார். எனது விழி பிதுங் கலாயிற்று. அடுத்த கட்டமாக என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. ''இங்கே வா'' என்று தனது மேசைக்கு அழைத்துச் சென்றார். அவரது மேசையிலிருந்த 'இந்தியா ருடே', 'இலஸ்ரேட்டற் வீக்லி ஒவ் இந்தியா' போன்ற பல சஞ்சிகைகளில் உள்ள விளம்பரங்களைக் காட்டினார். ''இதை ஏன் உனக்குக் காட்டுறன் தெரியுமோ?'' என்று கேட்டார். என்னால் பதில் சொல்லமுடியவில்லை. ''நான் புத்தகங்கள் எடுத்தால் முதல்பார்க்கிறது விளம்பரம்தான்'' என்றார். ''அதிலதான்ராப்பா விசயமிருக்கு'' என்று கூறி முடித்தார். பின்பு எனது பதிலை எதிர்பாராமலே விளம்பரங்கள் எப்படி மக்களைக் கவர்ந்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திழுக்கக்கூடிய வண்ணம் தயாரிக்கப்படுகின்றன என்றும், விளம்பரங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு அதன் நோக்கத்தை வெளிப்படுத்தும் வண்ணம் மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்படுகின்றன என்றும் அதில் போடப்படும் படங்கள், வர்ண அமைப்புக்கள், நிறங்களின் பொருத் தமான தன்மை, அந்தப் பொருளை வாங்குவதற்குக் கவரக்கூடிய அமைப்பு என்பன பற்றி நீண்ட நேரமாக விளங்கப்படுத்தினார். விளம் பரங்கள் தயாரிப்பதற்கு என்றும் Layout செய்வதற்கு என்றும் விசேட மாகப் படித்த தொழில் வல்லுனர்கள் உள்ளனர் என்றும், இதற்காகத் தொழில் நிறுவனங்கள் உள்ளன என்றும் அதனைப்பற்றி விளக்க மளித்தார்.

"இதை ஏன் உனக்குச் சொல்லுறன் தெரியுமோ?' என்று என்னைப் பார்த்துக் கேட்டார். உண்மையாக எனக்கு அப்போது ஒன்றும் விளங்கி யிருக்கவில்லை. "எங்கட வெளியீடுகளையும் நாங்கள் செய்யேக்குள்ளே இதேபோலக் கஸ்ரப்பட்டு செய்யவேணும். அதைப் பாக்கிறவர்களுக்கு வாசிக்கத் தூண்டோணுமடாப்பா" என்றார் கிட்டண்ணை. இப்போது தான் எனக்கு விளங்கியது. அப்போது கிட்டண்ணா இந்திய இராணுவத் தினது அட்டூழியங்களை வெளிப்படுத்தும் வகையில் ஏராளமான பிரசுரங்களை வெளியிட்டுக்கொண்டிருந்தார். இவை எல்லாவற்றையும் இந்தியாவிலும் வெளிநாட்டிலுமுள்ள தூதராலயங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பத்திரிகைகள், அரசியல்கட்சிப் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கியமானவர்கள் என எல்லோருக்கும் தொடர்ச்சியாக அனுப்பிக்கொண்டிருந்தோம். இவர்களில் எத்தனை பேர் எங்களுடைய பிரசுரங்களைப் பார்த்திருப்பார்கள்? இவர்கள் எல்லோரும் பார்க்கத் தூண்டும் வகையில் எமது பிரசுரங்களைத் தயாரிக்க வேண்டும். கிட்டண்ணா இதனை மனதில் வைத்துத்தான் செயற்பட்டார். இரவு பகலாக யோசித்தார். பலரை அழைத்து அபிப்பிராயம், ஆலோசனை கேட்டார். அவரது கடினமான உழைப்பின் பயனாகத் 'தமிழீழம்', 'பவான் பேப்பர்ஸ்' (Pawan Papers) 'You too India', தியாகி திலீபன், கப்டன் லாலா ரஞ்சன் போன்ற பிரசுரங்கள் வெளிவந்தன. இவற்றில் 'தமிழீழம்' 7 வெளியீடுகளும், பவான் பேப்பர்ஸ் 20 வெளியீடுகளும் வெளியிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வெளியீடுகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. ஜனநாயகம்,

Tamileelam Archive

அகிம்சை என்ற இந்தியாவின் போலி முகத்திரைகளை இந்த நூல்கள் கிழித்தெறிந்தன; இந்தியாவின் சுயரூபத்தை அம்பலமாக்கின.

கிட்டண்ணா விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின்பு வெளிநாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. லண்டனிலிருந்து மாதமிருமுறை 'களத்தில்' எனும் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. பிரான்சிலிருந்து இதுவரைகாலமும் நிழற்படப் பிரதியில் வெளிவந்த 'எரிமலை' எனும் மாதாந்த சஞ்சிகை அச்சுக்கூடத்தில் ஏறிப் பல வர்ணங்களுடன், புது மெருகுடன் 'கலை பண்பாட்டு சமூக அரசியல் ஏடாக' உலா வரத் தொடங்கியது. மாதமிரு முறை கனடாவிலிருந்து வெளியாகும் 'உலகத்தமிழர்' எனும் பத்திரிகையும், நோர்வேயில் இருந்து வருடத்திற்கு மும்முறை வெளிவரும் 'சுதந்திரதாகம்' எனும் சஞ்சிகையும் கிட்டண்ணா பொறுப்பெடுத்த பின்பு புதுப்பொலிவுடன் வெளிவரத்தொடங்கின. இவற்றில் 'உலகத்தமிழர்' ஆறாயிரம் (6000) அச்சிடப்பட்டு விற்பனையாவதும் 'எரிமலை'யும் 'களத்தில்' உம் தலா எண்ணாயிரம் (8000) பிரதிகள் விற்பனையாவதும் குறிப்பிடத்தக்கது.

உலகநாடுகளின் கவனத்தை எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பக்கம் ஈர்ப்பதற்காகப் பல முயற்சிகளை கிட்டண்ணா முன்னெடுத்தார். எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி, தமிழீழ மக்களின் மீது இந்திய, சிறீலங்கா அரசுகள் கட்டவிழ்த்துவிட்ட அராஜகம், தமிழீழ மக்களது துன்பதுயர நிலைகள் மாத்திரமன்றித் தமிழீழத்தின் வளங்கள், இயற்கைக் காட்சிகள், எமது மக்களின் கலை, பண்பாடுகள், பொருளாதார வாழ்வு போன்ற இன்னோரன்னவற்றை ஓவியங்களாகவும், புகைப்படங்களாகவும் கொண்டு பல்வேறு நாடுகளில் ஓவியக்கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி போன்றவற்றை நடாத்தினார். ஆங்கிலம், பிரஞ்சு, டொச், லத்தீன், நோர்வேஜியன், டெனிஸ் ஆகிய சர்வதேச மொழிகளில் விடுதலைப் போராட்டம் பற்றியும் கள நிகழ்வுகள் பற்றியும் துண்டுப் பிரசுரங்களாகவும், சிறு சிறு கைநூல்களாகவும் ஏராளமாக வெளியிட்டார். பிரஞ்சு மொழியில் 'தமிழ்' (Tamule) என்ற சிறு ஏட்டையும், டொச்சில் 'வணக்கம்' என்ற சஞ்சிகையையும், நோர்வேஜிய மொழியில் 'தமிழ் ஈழம்' எனும் ஏட்டையும் தொடர்ந்து வெளிவரச் செய்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''பேப்பர் விற்கப் போனால் சனங்களொண்டும் பேப்பர் வேண்டுவதில்லை, ஆனால் அவையளின்ர வீடுகளில் போய்ப் பார்த்தால் ரீ. வியென்ன, டெக் என்ன சாமான்கள் எண்டால் குவிஞ்சுபோய்க் கிடக்கும்'' என்று வெளிநாட்டுக் கிளையொன்றில் பணியாற்றும் உறுப்பினர் ஒருவர் கிட்டண்ணாவிடம் குறை சொல்வது போல் கூறினார். கிட்டண்ணாவிற்கு கோபம் வந்துவிட்டது. ''இவ்வளவு சாமான்களையும் எங்கட சனங்கள் வைத்து அனுபவிக்கினம் என்று தான் நாங்கள் சந்தோசப்படவேண்டும்'' என்று கோபமாகக் கூறியவர், ''ஒரு நாளும் எங்கட சனங்களைப் பேசக் கூடாது. நீ உன்ர திறமையைக் காட்டி பேப்பரை விற்கப்பார். சனங்களை மட்டும் குறை சொல்லாதே'' என்றார். இச்சம்பவம் நடந்தது வெளிநாடு ஒன்றில்.

இப்படித்தான் ஒருமுறை மடு அகதிமுகாமில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை பற்றி விமர்சித்து இங்கு வெளிவரும் சஞ்சிகை ஒன்றில் கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அதனைப் பார்த்த கிட்டண்ணாவிற்குப் பொறுக்கவில்லை. உடனடியாக அக்கட்டுரையினை விமர்சனம் செய்து பின்வருமாறு எழுதினார்:

''அக்கட்டுரை படித்தவுடன் என் நெஞ்சு பொறுக்கவில்லை. இதே சனத்திற்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்காகவும் தான் நாம் போராடுகிறோம். அவர்களும் எம்முடைய சனங்கள். தலைவர் பார்த்தால் பொறுத்திருக்கமாட்டார்.

''ஒவ்வொரு அகதியின் வாழ்விலும் எத்தனையோ சொல்லொணாத் துன்பங்களும் துயரங்களும் அடங்கியிருக்கிறது. அத்துயரங்கள் எமக்குப் புரிய மாட்டாது. நானும் மத்தியதரக் குடும்பத்தைச் சார்ந்தவன். எனக்கு அறிவும் அனுபவமும் ஏற்பட்டதை வைத்துப் பார்த்தால் இக்கட்டுரை எழுதப்பட்ட விதம் மிகவும் பிழையானது. அச் சீர்கேடுகளை மாற்றவேண்டியது நாமே தான். அப்பிழைகளும் எம்முடையதே.

''பிரபாகரனின் கொள்கைக்கு முரணானது. பிரபாகரன் என்ற சொல் இன்று ஒரு தனிமனிதனின் பெயரல்ல. அப்பெயருக்குப் பல பொருள் உண்டு. பல அர்த்தங்கள் உண்டு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"நாம் அதே மனிதரோடு சமகாலத்தில் வாழ்வதால் இவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் விடலாம்.

"பிரபாகரன் என்றால் symbol of freedom என்றும் சிலர் கூறுகிறார்கள்.

"இன்னும் எளிமை, மனித நேயம், அன்பு, ஆளுமை, தலைமை, முக்கியமாக மக்களை நேசித்தல், எப்போதும் ஏழைகளையும் எளியவர்களையும் நேசிப்பது, அவர்களுக்காகவே சிந்திப்பது, இவைதான் 'பிரபாகரன்' என்றால் அர்த்தமாகிறது. இவை ஒரு தத்துவம்; எமக்கு வழிகாட்டும் சத்திய போதனை. இவற்றைத் தான் எமது இயக்கமும் விடுலைப்போராட்டமும் இலட்சியமாகக் கொண்டுள்ளன.

"நானும் பதினெட்டு வயதில் பள்ளிக்கூடப்படிப்பை இடையிலே கைவிட்டு பின் இன்றுவரை இவ்வழிநடத்திலிலே, இப்போதனைகளையும் தத்துவங்களையும் படித்துத்தான் வளர்ந்தேன். இதை வைத்துத் தான் சிந்திக்கவும் பழகினோம். இப்படியான காலகட்டத்தில் மேலெழுந்த விதமாகச் சனங்களைப் பற்றி இப்படி எழுதுவது சரியல்ல."

எவ்வளவு ஆழமான கருத்துக்கள். எமது தலைவரைப் பற்றியும் மக்களைப் பற்றியும் கிட்டண்ணா எவ்வளவு தெளிவாகத் தீர்க்கமாகக் கூறியிருக்கிறார்.

கிட்டண்ணா வெளிநாட்டுக்குப் போனபின்பு அங்கு நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரைகாலமும் போராட்டத்தில் இருந்து ஒதுங்கியிருந்த புத்திஜீவிகள், மாணவர்கள், வேலை பார்ப்பவர்கள், அகதிகள் எனப் பல தரப்பட்டவர்களை அவர் அரவணைத்துக்கொண்டார். ஒவ்வொரு தமிழனுக்கும் தாயகத்தின் விடுதலைக்கான கடமையினை, பங்களிப்பினை அவரது அன்பாலும் ஆளுமையாலும் உணரச்செய்தார். விடுதலைப் புலிகளது வெளிநாட்டுக்கிளைகளின் செயற்பாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் 'தமிழர் ஒருங்கிணைப்புக் குழு' என்னும் அமைப்பை ஆரம்பித்துவைத்தார். இவை மாத்திரமல்லாமல் விடுதலைப் புலிகளின் எல்லாக் கிளை அமைப்புக்களையும் அந்தந்த நாடுகளில் பதிவு செய்து, அந்தந்த நாட்டின் சட்ட ஒழுங்கிற்கு (law & order) மதிப்புக்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கொடுத்து, அதற்கமையவே வேலைத்திட்டங்களை அமைத்துக் கொடுத்தார். 'விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்', 'விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு', 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்' போன்ற பல உப அமைப்புகளையும் பல்வேறு நாடுகளில் நிறுவினார். கலை பண்பாட்டுக்கழகம் வெளிநாடுகளில் ஏராளமான இசை நிகழ்ச்சிகளையும் கலைநிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது. வெளிநாட்டுத் தமிழர்களிடம் மாத்திரமல்லாமல் வெளிநாட்டவர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை இந்நிகழ்ச்சிகள் பெற்றுள்ளன. அண்மையில் சுவிஸ் நாட்டில் கலைபண்பாட்டுக் கழகம் தயாரித்து மேடையேற்றிய நாடகம் ஒன்று, ஐரோப்பாவில் நடந்த நாடகப்போட்டிகளில் (பல்வேறு மொழிகளில்) முதலாம் பரிசைத் தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது ஆகும். வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களிடையே எமது பண்பாடுகளை விடாப்பிடியாகப் பேணுவதற்கும், வெளிநாட்டவர் மத்தியில் எமது பண்பாட்டின் விழுமியங்களை உணர்த்துவதற்கும் கலை பண்பாட்டுக் கழகம் பாடுபட்டு வருகிறது. இதேபோலவே விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பும் சிறுவர்களுக்கான தமிழ்ப்பாடசாலைகள் ஆரம்பித்தல், தமிழ் இளைஞர் மத்தியில் மெய்வல்லுநர்ப் போட்டிகளும் உதைபந்தாட்டப் போட்டிகளுமாக நிறைய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறது. பொருண்மிய மேம்பாட்டுக் கழக வெளிநாட்டுக் கிளையினரும் தமிழீழ வளங்கள் குறித்தான பல ஆய்வுகளை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் மூலபலமாக நின்றவர் கிட்டண்ணா என்றால் அது மிகையாகாது.

சுவிற்சர்லாந்து நாட்டில் 'ஈழநாதம்' எனும் உள்ளூர் வானொலிச் சேவையினையும், கனடாவில் மொன்றியேல், டொரொன்ரோ ஆகிய நகரங்களிலும் உள்ளூர் வானொலிச் சேவையினையும் ஆரம்பித்து அங்குள்ள தமிழ் மக்களுக்கு விடுதலை உணர்வைப் பரப்பினார். வளர்ந்து வரும் நவீன உலகில் சிறந்த பிரச்சார உத்தியாக ஒளிப்பதிவு நாடா திகழ்வதை அவதானித்த கிட்டண்ணா, இதனை நன்கு பயன்படுத்தினார். தமிழீழத்தில் 'நிதர்சனம்' என்ற புலிகளின் தொலைக்காட்சிச் சேவையினை ஆரம்பித்தது போன்று வெளிநாட்டுத்தமிழர்களுக்காக 'தரிசனம்' என்ற வீடியோ சஞ்சிகையினை மாதந்தோறும் பிரான்சிலிருந்து வெளிவரச் செய்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிட்டண்ணா வெளிநாட்டில் இருந்தாலும் அவரது மனம், எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாமே தமிழீழத்தைப் பற்றியதாகவே அமைந்தது. தமிழீழத்தில் உள்ள வளங்கள், கலை - பண்பாடுகள், அரசியற் செயற்பாடுகள், சமூகப் பணிகள், இராணுவக் கட்டமைப்புகள், பயிற்சிமுறைகள், புகைப்படக்கலை போன்ற பல துறைகளைப் பற்றிய தனது எண்ணங்களை; அனுபவரீதியாகத் தான் பெற்றுக்கொண்டவற்றை; அறிவு பூர்வமாகத் தான் அறிந்தவற்றை விளக்கமாகச் சிறு சிறு குறிப்புகளாகப் பல மடல்களை எழுதினார். தலைவரைப் பற்றி அவர் பூரணமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். ஓரிடத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"வெளிநாடுகளில் வாழும் மக்கள் எமது தலைவரின் மீது அதிகமான நம்பிக்கையையும் உறுதியையும் கொண்டுள்ளனர். சில இடங்களில் இயக்கத்தை நம்பாவிட்டாலும் தலைவரை நம்புகின்றனர். இப்படியாக எமது தலைவர் தனிப்பெரும் தலைவர் என்றுதான் மக்களால் கணிக்கப் படுகிறார்."

மக்களின் மீது அவர் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார். இராணுவக் கெடுபிடிகள், பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை போன்ற அழுத்தங்கள் தமிழீழ மக்கள் மீது திணிக்கப்படும் போதெல்லாம் அவர் வேதனைப்பட்டார். ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் இடம் பெயரும் மக்களின் நிலை குறித்துக் கவலை கொண்டார். இளவாலை, மாதகல் பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் முன்னேறி வந்தபோது கீழே குறிப்பிட்டவாறு அவரது சிந்தனை வெளிப்பட்டது:

"இடம்பெயர்ந்து அகதிகளாகும் சனங்களைப் பொறுத்தவரையில் மிக முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும். எமது அமைப்பின் மாணவர், மகளிர், அரசியல், கலை, கலாச்சார இப்படியான எல்லாப் பிரிவினரும் இராணுவப் பிரச்சனையால் இடம்பெயரும் சனங்களின் விடயத்தில் உடனடியாகவும் அதிகமாகவும் கவனம் செலுத்தவேண்டும்.

"போராட்ட உச்சக்கட்ட வேளையில் கூடப் பொதுமக்களை அதன் தாக்கம் பாதிக்காத வகையில் நாம் பல விடயங்களைத் திட்டமிட்டுச் செய்யவேண்டும். சமயம் கிடைக்கும் போதெல்லாம் சனங்கள் சந்தோசமாக இருக்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்குதல், விழாக்கள்,

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

திருவிழாக்கள் போன்று பல விடயங்களை நாமே ஊக்குவிக்கலாம். அதேவேளை சனங்களைப் போராட்டத்துடன் ஒன்று திரட்டுவதற்கான திட்டங்களையும் போடவேண்டும்.''

வெளிநாட்டிலிருந்து அவர் நிம்மதியாக வேலை செய்ய இந்திய அரசு விடவில்லை. அவர் எழுதிய மடல் ஒன்றிலிருந்து இது வெளிப்படுகின்றது.

''நான் நலம், நாடு நாடாக ஓடிக்கொண்டிருக்கிறேன். பாரத மாதாவின் புண்ணியத்தால் பல நாடுகளுக்கு விரட்டப்படுகிறேன். இருந்தும் நலம்''

மேற்குலக நாடுகளில் கூட இந்தியாவின் அழுத்தங்கள் எவ்வளவு தூரம் பாய்ந்துள்ளன என்பதை இந்த வரிகள் விபரிக்கின்றன.

இத்தனை கெடுபிடிகளுக்கு மத்தியிலும், மேற்குநாடுகளில் கூட வெளிப்படையாக உலாவ முடியாத நிலையிலும் அவர் பல மேற்கு நாடுகளுடனும், மனித உரிமை அமைப்புகளுடனும், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். பல விடுதலை அமைப்புகளுடனும், பல அரசியற் கட்சிகளுடனும் உறவுகளை வளர்த்துக்கொண்டார். சிறீலங்கா அரசின் கெடுபிடியான இராணுவ நடவடிக்கைகளுக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும், போக்குவரத்துத்தடை போன்ற இறுக்கங்களுக்கும் தமிழீழ மக்கள் முகம் கொடுப்பதை நன்குணர்ந்துகொண்டார். மக்களின் இன்னல்களையும் துன்பதுயரங்களையும் நன்கு புரிந்துகொண்டதால் மேற்குலக நாடுகளுடனும் பல்வேறு மனித உரிமை அமைப்புகளுடனும் கலந்துரையாடி, விவாதித்துச் சமாதானத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொண்டார். இதனை எடுத்துக் கொண்டு தாய் நாட்டின் மீது காலடி எடுத்துவைக்கவேண்டும் என்ற துடிப்புடன் இருந்தார். அவரது துடிப்பு இவ்வாறு வெளிப்பட்டது:

''எப்போது எமது மண்ணிலே கால் வைப்பேன் என்று ஒவ்வொரு கணமும் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். எனது தாயகத்திலே எங்கேயாவது ஒரு மூலையிலேனும் என்ன வேலையாவது செய்துகொண்டிருந்தாலே அது மனதுக்கு முழு அமைதியைக் கொடுக்கக் கூடியது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"இங்கு இவ்வளவு காலமும் தமது முகவரிகளைத் தொலைத்துவிட்ட எமது மக்களின் மத்தியிலும் இப்போது நாடிருந்தும் நாடோடியாக ஓடுகிறேன். தனக்கென்று ஒரு சுதந்திர நாடு அமையும் போதுதான் ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து வாழமுடியும். என்னால் வெளி நாடுகளில் வாழமுடியவில்லை; எனது சுபாவம் அப்படி. இப்போதுதான் புரிகிறது - நாம் எமது மக்களையும் மண்ணையும் எவ்வளவு தூரம் நேசிக்கிறோம் என்பது. இன்னும் எத்தனையோ பிறவிகள் எடுத்தாலும் எனது மக்களுக்கும் மண்ணுக்கும் சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைக்கவேண்டும். நாம் எமது மண்ணின் ஒவ்வொரு அங்குலத்திற்கும் போரிட்டவர்கள்; ஒவ்வொரு வீட்டையும் பிடிப்பதற்காகப் போரிட் டவர்கள். எப்படி இம் மண்ணைப் பிரிந்து வாழ முடியும்...?"

நிச்சயமாக இந்த மக்களையும் மண்ணையும் பிரிந்து வாழக் கிட்டண் ணாவினால் முடியாது. இதனால் தான் சமாதானத்திட்டத்துடன் புறப் பட்டு வந்தார். அந்தச் சமாதானப் புறாவை இந்திய ஆதிக்கக் கரங்கள் மரணப் பொறிக்குள் வீழ்த்தின.

எமது விடுதலைப் போராட்டத்திலுள்ள தர்மமும் உண்மையும் நிச்சயமாக இதற்குப் பதில் சொல்லும்...!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 'கிட்டண்ணா'
# ஒரு அற்புதமான போராளி

– ச. பொட்டு

இட்டண்ணையின் எண்ண ஓட்டங்களுக்கு ஈடுகொடுப்பது கடினம். இயக்கத்தின் எந்த ஒரு பணியானாலும் புதிய புதிய எண்ணங்களை வெளிப்படுத்துவார். ஒவ்வொரு துறையும் எப்படிச் செயல்படவேண்டும் என்பது பற்றி நீண்ட விரிவுரை நிகழ்த்தும் அளவிற்கு, ஒவ்வொன்றையும் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து வைத்திருந்தார்.

வெறுமனே சிந்தித்துவிட்டு, சொல்லிவிட்டு, எழுதிவிட்டு அதனை மறந்துவிடும் அல்லது கைவிடும் சாதாரண மனிதர் அல்ல கிட்டண்ணை. அவரது எல்லாச் சிந்தனைகளும் செயல் வடிவம் பெறவேண்டும் என்பதில் விடாப்பிடியானவர்.

கிட்டண்ணையின் நிர்வாகத்திறன் வித்தியாசமானது; பிரமிப்பூட்டுவது. தனது நிர்வாகத்திற்கு உட்பட்ட எந்தவொரு வேலைகளிலும் அவரது ஈடுபாடு, தலையீடு அளவுக்கதிகமாகவே இருக்கும். ஒவ்வொரு சிறிய விடயத்திலும் அவரது அதீத ஈடுபாடு, கண்காணிப்புக் காரணமாக எந்தவொரு அனுபவம் குறைந்த புதிய ஆட்களை வைத்தும் பெரிய வேலைத் திட்டங்களை அவரால் செய்யமுடிந்தது. தன்னுடன் பணியாற்றும், தன்கீழ் பணியாற்றும் எல்லோரையும் தன்வசப்படுத்தும், தானே நினைத்ததைச் செய்யவைக்கும் திறன், அவரது தனித்துவமான வெற்றிகளுக்குக் காரணமாக அமைந்தது.

ஒவ்வொரு வேலைகளையும் தானே திட்டமிட்டு நேரில் நின்று சரிபார்த்து அவற்றை ஒழுங்கமைப்பார். குட்டிசிறியின் 'மோட்டார்

Tamileelam Archive

செல்'லுக்கு 'கரி மருந்து' அளவு பார்ப்பதிலிருந்து, நண்டுக்கறிக்கு உள்ளி தட்டிப் போடுவதுவரை, எதுவாயிருந்தாலும் தானே நின்று, சரிபார்த்து ஆரம்பித்து வைத்தால்தான் அவருக்குத் திருப்தி. கிட்டண்ணையின் இராணுவ நிர்வாகத்திறன் உலகறிந்த விடயமாகும். தானே சண்டைக் களங்களில் முன்நின்று வழிநடத்துவது அவரது தனிப்பண்பு. 1987க்கு முன்னைய காலங்களில் யாழ் குடாநாட்டிற்குள் இராணுவ நடமாட் டத்தை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு அவர் பயன்படுத்தியது தன்வசமிருந்த குறைந்த ஆயுதங்களையும் போராளி களையும் மட்டுமல்ல, எதிரியை முட்டாளாக்கும் தந்திரோபாயத்தையும் தனது மனவலிமையையும் சேர்த்தே பயன்படுத்தினார். நெருக்கடியான நேரங்களில் அவர் காட்டும் மனவலிமை நம்ப முடியாததாய் இருக்கும்.

அடையாளம் தெரியாத எதிரி, அந்த வீரனுக்குக் குறிவைத்த ஒரு மங்கலான மாலைப் பொழுது. வழமையாக எரிந்துகொண்டிருக்கும் மின்குமிழ் எரியவில்லை. அவரது 'கார்' நிறுத்தப்பட்டுக் கதவைத்திறந்து இறங்க முற்படும் வேளையிலேயே, அந்த நிழலான உருவத்தின் அசைவு உள் உணர்வுகளை எச்சரிக்கின்றது. நிதானிப்பதற்கிடையில் வந்து விழுந்தது 'கிரனேட்' தான் என்று அவசரமாக வெளியேற முற்பட்ட வேளையிலேயே அது வெடித்துவிட்டது. ஆசையாய் வைத்திருந்த சின்னக்காரின் 'ஸ்ரெயறிங்' கிற்குள் சிக்குப்பட்ட காலை இழுத்து எடுப்பதற்கிடையில் வெடித்துவிட்டது. இதுவரை நிகழ்ந்தவைகள் சாதாரணமானவை; எந்த ஒருவருக்கும் ஏற்படக்கூடியவைதான். ஆனால், அதன்பின்னர் அவர் நடந்துகொண்டவிதம் கிட்டண்ணைக்கே உரிய தனித்துவம் வாய்ந்தது. முழங்காலுடன் துண்டாகிப் போய்த் துடிக் கொண்டிருந்தது அவரது கால். 'கிரனேட்' வந்த திசையை நோக்கி அவரது 'ரிவோல்வர்' மூன்று சூடுகளைச் சுட்டு ஓய்ந்தது. அவரது நினைவு மங்குகிறது; முழுமையாய் இருந்த 'ஜீன்ஸ்' பக்கத்தைக்கிழித்து, துண்டாகிப் போன காலுக்குத் தானே கட்டுப்போட்டுக்கொண்டிருக் கையில் நினைவு மேலும் மங்குகிறது. உள் உணர்வு அவரை எச்சரித்தது. 'கிரனேட் எறிந்தவன் அருகில் வருவான். அவனைச் சுடவேண்டும்' என்ற உணர்வு, அவரை 'முழுமையாக மயங்கிப் போய்விடாமல்' வைத்திருக் கிறது. 'கிரனேட்' எறிந்தவன் வருவான் வருவான் எனத் திரும்பத் திரும்ப நினைத்துத் தன்னை முழுமையாக மயங்கிப்போய் விடாமல் வைத்திருந்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தார். 'மூன்று சூடுகளைச் சுட்டுவிட்டேன் – ரிவோல்வரில் இன்னும் மூன்று ரவைகள்தான் மிச்சமாய் உள்ளது' என்பது நினைவில் உறைக்கும் போது அவர் மயங்கிக் கொண்டிருந்தார். வைத்தியசாலை இவ்வளவு பக்கத்தில் இருந்தபடியால் தான் அவர் உயிர் தப்பினார் என்பதும், சத்திரசிகிச்சை அறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட கணத்தில் அவரது இதயத்துடிப்பு முற்றாகவே நின்றுவிட்டிருந்தது என்பதும் அவர் உயிர் தப்பியது மருத்துவ உலகின் புதினம் என்பதும் எல்லோரும் தெரிந்த விடயங்கள்.

அவர் காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த இடத்தில் தனது 'ரிவோல்வரை' இறுகப்பற்றியபடி கிடந்தார் என்பதும், தனது 'ரிவோல்வரில்' சுட்டுவிட்ட ரவைகளுக்குப் பதிலாக புதிய ரவைகளை மாற்றிப் போட்டிருந்தார் என்பதும், ஆனால் நினைவுதப்பிய நிலையில் அவர் வெற்றுக் கோதுகளுக்குப் பதிலாக மீதியாய் இருந்த நல்ல ரவைகளை வெளியே எடுத்துவிட்டு, அந்த இடத்திற்கே புதிய ரவைகளைப் போட்டிருந்தார் என்பதும் அநேகம் பேருக்குத் தெரியாத விடயங்கள். அன்று மட்டுமல்ல, தனது போராட்ட வாழ்வின் ஒவ்வொரு நாட்களிலும் சந்தர்ப்பங்களிலும் அவர் தனது மன உறுதியை வெளிப்படுத்தினார். அதுவரை காலமும் யுத்தமுனைகளிலும் தாயகபூமியின் எல்லாப் பரப்பிலும் கம்பீரமாய் உலாவிவந்த வேங்கை, கால் உடைந்து கட்டிலில் வீழ்ந்தபோதும் தன்னைச் சோர்வு சூழ விடவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் போராட்டத்திற்கான, போராளிகளுக்கான எந்த ஒரு வேலையையும் பொறுப்பேற்றுச் செய்ய கிட்டண்ணை தயங்கியதில்லை. தனக்கு ஒப்படைக்கப்படும் வேலை தனது தனிப்பட்ட நிலையினை எப்படித் தீர்மானிக்கும் என்பது பற்றி ஆராயாமல் இலட்சியத்திற்காக உழைத்தவர். தலைவர் அவர்களின் தனிப் பட்ட மெய்க்காவலராக இருந்தபோதிலும்சரி, தலைவர் அவர்களுக்கு அடுத்தபடியான தலைவனாக வளர்ந்து இருந்த போதிலும் சரி அவர் இந்த நிலைப்பாட்டில் இருந்து மாறவே இல்லை.

1983 இன் ஆரம்பநாட்கள், எம்மில் பன்னிருவருக்கான பயிற்சி. எல்லாமாக இருபத்தைந்து பேர்வரையில் உள்ளடங்கிய காட்டுவாழ்க்கை. பஸ்ஸில் போய் கிளிநொச்சிக்கு அங்காலை எங்கையோ இறங்கி இருளும்வரை ரோட்டில் நின்று, 'ரைக்ரரில்' ஏறி உள்ள காடெல்லாம் சுத்திச் சுழன்று, நடுக்காட்டில் ஒரு சிறிய கொட்டிலுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வடக்கு எது, கிழக்கு எது என்று தெரியாமல் குழம்பிக்கொண்டு நின்று, அதிகாலை முடிந்து விடியும் போது பார்த்தால் சூரியன் மற்றப்பக்கத்தால் உதிக்கிறது. அநேகமாக உடையார்கட்டுப் பக்கமாக இருக்கவேண்டும்.

எமது பொறுப்பாளர்களில் அநேகரைத் தெரியும்; சிலரைத் தெரியாது. கிட்டண்ணையை நல்லாகவே தெரியும். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்பவர்கள் என்று சொல்லி, அவர்தான் எம்மில் இருவருக்கு ஒரு வீட்டில் அறை எடுத்துத் தந்திருந்தார். தினமும் பின்னேரம் வந்து 'ஹோரஸ் ரணிங்' செய்யச் சொல்லிவிட்டு வாட்டத் தொடங்கினால் மனிசன் 'என்னத்தைச் சொல்ல, வாழ்க்கை வெறுக்கும்'. ''வேகம், வேகம், இன்னும்... இன்னும்.... '' என்று சொல்லி 5 மணிக்குத் தொடங்கியது, ஏழெட்டு மணிக்கு முடியும் போது, அந்தப் பெரிய விறாந்தை நிலம் வியர்வையால் நிரம்பி ஓடும். அதுவரை எதுவும் கதை இல்லை; இங்கிலீசும் தமிழுமாய் 'செய், செய்' என்பது தான். இயலாது என்றால் ''அப்ப உனக்கு ரெயினிங் இல்லை போ''; என்னத்தைக் கதைப்பது? அதற்குப் பிறகுதான் எம்முடன் அன்பாகக் கதைப்பார்.

'ரசிய' மொழி பெயர்ப்பான 'தாய்' நாவலை முழுமையாகப் படிக்கும் படி தந்திருந்தார். அதுபற்றிக் கேள்விகள் கேட்பார். 'பாவலின்' நண்பர்களின் பெயர் கேட்பார், காதலியின் பெயர் கேட்பார். ஆரம்பத்தில் வாசிக்கும்போது பழக்கமின்மையால் கரடு முரடானதாகத் தெரியும் 'மொஸ்கோ' மொழிபெயர்ப்பு நூல்களை வாசிப்பதில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் அவர்தான். இப்படி எமக்கு முன்னரே அறிமுகமாகி இருந்தவர் காட்டுப் பயிற்சி முகாமில் இருக்கிறாரா என்று தேடினால், ஆள் வருகிறார் கையில் அகப்பையுடன். எல்லோரும் நல்லாய்ச் செய்யவேண்டும் என்றும், தான் தான் இங்கு சமையல் என்றும் குட்டியாய் 'லெக்சர்' அடித்துக் கொண்டு நின்றுவிட்டுத் தலைவரைக் கண்டதும் ஓடி ஒளிந்தார். பெரிய பொறுப்பாளனாய் அறிமுகமான ஒருவரை எமக்கான சமையல்காரராய்ச் சந்திப்பது நம்பமுடியாத அனுபவமாயும், புதிய பாடமாயும் அமைந்தது. எமது அந்த முகாமின் சமையல் வேலை என்பது அந்தக் காலத்தில் சுலபமானதல்ல. குறுகிய காலம் பயிற்சி என்பதால் மிகவும் நெருக்கமான நேர அட்டவணை. உடற்பயிற்சி ஆசிரியர் புலேந்தி அம்மான் போட்டு வாட்டிப் போட்டு விட்டால், அடுத்த சந்தோசம் மாஸ்ரரின் வகுப்பிற்கு இடையில் உள்ள குறுகிய உணவு வேளையில். சமையல் கொட்டிலுக்குப்

Tamileelam Archive

போவது நடந்து அல்ல. போகும் வேகத்திற்கு அங்கே தடிகளால் கட்டிய சிறாம்பியில் உணவு தட்டுகளில் போட்டு மூடி வைக்கப்பட்டிருக்கும். கிட்டண்ணையும் ரஞ்சனும் இணைந்து சமையல். மூன்று வேளையும் நேரம் தவறாமல் உணவு கொடுக்கவேண்டும். ஒரு நாள் கூட நேரம் தவறியதாகவோ வேலையில் சினந்ததாகவோ நினைவில் இல்லை. ஆனால், தங்களது வேலைச் சுமையைக் குறைப்பதற்கான குறும்பு இருக்கும். உணவுத் தட்டுக்களில் இலக்கம் இடப்பட்டிருக்கும். தட்டுக்களை இலக்கம் மாறி எடுப்பவர்கள் அன்றைய சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கொடுக்கவேண்டும். ஆரம்பத்தில் தட்டுக்கள் இலக்க ஒழுங்கில் இருந்தன. பிரச்சனை இல்லை. இடையில் ஒருநாள் எல்லாம் மாறி இருந்தது. யார் பார்த்தது? அன்று நாங்கள் பாத்திரம் கழுவினோம். பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் பின்னர் நாங்கள் உசாராகிவிட்டோம்.



“

***போராட்டத்தில என்ன வேலை எண்டாலும் செய்வன். எங்களின்ரை பெடியளின்ரை உடுப்பைத் தோய்த்து மடிக்கும் வேலை எண்டாலும், அதை எப்படி வெள்ளையாய்த் தோய்ப்பது என்று தான் ஆராய்ச்சி செய்வன். எனக்கு இது பிரச்சனை இல்லை."***

”

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

றெஜிக்கு இலக்கம் ஆறு. விக்டருக்கு இலக்கம் ஒன்பது. அவர்கள் அடிக்கடி கழுவிக்கொடுத்தார்கள். அவர்கள் சரியாக எடுத்தாலும், இவர்கள் விட்டால் தானே! இப்படிப் பம்பலும் குறும்புமாய்த்தான். ஆனால், கடமை தவறியதில்லை. சமையலில் அலட்சியம் இருந்ததில்லை.

நீண்ட காலவோட்டத்தின் பின், ஒரு நாள் தலைவர் கூறுகிறார்– ''என்ன கடமையாக இருந்தாலும், அதைப் பொறுப்பேற்றுச் செய்யப் பின் நிற்கக்கூடாது. கடமையில் உயர்ந்தது, தாழ்ந்தது என்றில்லை. ஆரம்ப காலத்தில் ஒரு முறை எமது புதிய பயிற்சி முகாம் ஒன்றில் எல்லோருக்கும் வேலைகள் பங்கிட்டு நிர்வாகத்தைச் சீர்செய்துகொண்டு இருந்தவேளை கிட்டு தானே முன்வந்து அனைவருக்குமான சமையல் வேலையைப் பொறுப்பெடுத்துச் செய்தார்.''

புதிய போராளிகளுக்குத் தலைவர் எடுத்துச் சொல்லும் விடயத்தை அன்று நாங்கள் நேரே கண்டோம். அது எமக்குப் போராட்டம் பற்றியும் இயக்கத்தில் நாங்கள் நடந்துகொள்ளவேண்டிய நடைமுறை பற்றியும் ஒரு பாடத்தை வித்தியாசமான முறையில் எடுத்துச் சொல்லியது. கிட்டண்ணை வேலைகள் பொறுப்பேற்பதிலும் அந்தஸ்தினை, தரத்தினைப் பார்ப்பது இல்லை. ஆனால், அவர் வேலையை ஒழுங்கு செய்யும் விதமும் செய்துமுடிக்கும் பாங்கும் அந்த வேலைக்கு ஒரு அந்தஸ்தினை, உயர் தரத்தினை ஏற்படுத்திவிடும் என்பதே உண்மை.

கிட்டண்ணை, இறுதியாக நாட்டை விட்டுப் புறப்படும் காலத்தில் மிகவும் நொந்துபோயிருந்தார். இந்தியாவில் வைத்துக் கைது செய்யப்பட்ட தன்னையும் சக போராளிகளையும் விடுவிக்கும்படி சிறையில் உண்ணாவிரதம் இருந்ததும், அதனைத் தொடர்ந்து அவர் யாழ் நகரில் விடுவிக்கப்பட்டதும், அதன் பின்னர் அவர் மணலாற்றுக் காடு சென்று தலைவருடன் இணைந்து கொண்டதும் தெரிந்தவைகள் தான். தன்னுடன் இறுதிவரை துணைநின்ற போராளிகள் சிறையில் வாடுவதையும், இந்தியர்கள் தன்னை மட்டும் விடுவித்துத் தன் தோழர்களை சிறையில் வைத்து வாட்டுவதையும் சொல்லிச் சொல்லி வெதும்புவார். ''என்ரை கோஸ்டி எல்லாத்தையும் என்னட்டை இருந்து பிரிச்சுப்போட்டாங்கள் மச்சான்'' என்று சொல்லும் போது, அந்த வீரனின் நெஞ்சின் ஈரம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கண்களில் வந்து நிற்கும். கிட்டண்ணை சர்வதேசத் தொடர்பாளராக நாட்டை விட்டுப் புறப்படுவது என்பது முடிவு செய்யப்பட்டுவிட்டது. எந்த வேலையாக இருந்தாலும் பொறுப்பேற்க வேண்டும் என்ற அவரது வழமையான நடைமுறைக்குச் சோதனையாக வந்தது இம் முடிவு. எங்கோ ஓர் ஐரோப்பிய நாட்டில், எம் தாயக மண்ணை விட்டு வெகு தொலைவில், தான் உயிராய் நேசித்த போராளிகளை விட்டுப் பிரிந்து... தன் மக்களை விட்டுப் பிரிந்து, தாய் தந்தையாய் தன்னை வளர்த்த தலைவரை விட்டுப்பிரிந்து... நினைத்து நினைத்துக் கலங்கினார்.

மணலாற்றுக்காடு. நான் அப்போது யாழ் மாவட்ட நிர்வாகத்தைப் பானுவிடம் ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணம் புறப்பட இருந்தேன். எம்மிடையே நீண்ட பிரிவு வரப்போகிறது என்பது தெரிகிறது. சிறிய வட்டக் கொட்டிலில் வைத்து கதைக்கத் தொடங்கினார். இயக்கத்தில் ஒவ்வொருவரும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றி, தலைவரின் எண்ணங்களுக்கு நாம் எப்படிச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி "எமது போராட்டத்திற்காக என்ன வேலை ஒப்படைக்கப்பட்டாலும் அதில் தீவிரமாக ஈடுபடவேண்டும். எமது கடமையை மேலும் மேலும் சிறப்பாகச் செய்வதற்கு வேண்டிய சகல முயற்சிகளிலும் இறங்கவேண்டும். எனக்கு என்ன வேலை எண்டாலும் செய்வேன்; எங்களின்ரை பெடியளின் உடுப்பைத் தோய்த்து மடிக்கும் வேலை எண்டாலும், அதை எப்படி வெள்ளையாய்த் தோய்ப்பது என்று தான் ஆராய்ச்சி செய்வன். எனக்கு இது பிரச்சனை இல்லை." எனது பொறுப்பு மாற்றத்திற்காகச் சொன்னாரா? அல்லது தனது புதிய பொறுப் புகளை ஏற்றுக் கொள்வதில் தனது மனப்போராட்டத்திற்காகத் தனக்குத் தானே சொன்னாரோ தெரியாது.

அவர் சொல்லிக்கொண்டே இருக்கின்றார். தூரத்தே கேட்கும் சில்வண்டுச் சத்தத்தை விடக் காடு நிசப்தமாய் இருக்கிறது. நீண்ட கனத்த மௌனத்தின் பின், "எங்கடை சனத்தையும், இந்த மண்ணையும் விட் டுட்டுப் போகப் போறன் மச்சான். இனி எந்தக் காலமோ...?" சொல்லி முடிக்காமல் குமுறிக் குமுறி அழத்தொடங்கினார். எமது தாயகத்தின் மீது, எமது மக்களின் மீது, எமது விடுதலைப் போராட்டத்தின் மீது, எமது தலைவர் மீது அவர் வைத்த பாசம் - பற்று அளவிடமுடியாதது. ❑

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தலைநிமிர்ந்து நின்று தாய்மண்ணைக் காப்போம்

-ஆதிலட்சுமி

ஒரு வசந்தம் தொலைந்துவிட்டது.
எங்கள் தேசத்தின் வாசலில்
ஏற்றிவைத்த தீபமொன்று
ஏகாதிபத்திய நெருப்பில்
எரிந்து போய்விட்டது.
எங்கள் விளைநிலத்துக்கு
வித்துக்களை ஊன்றிவந்த
விருட்சமொன்று சரிந்துவிட்டது.
எங்கள் புனித மூச்சைப்
புயல் தின்றுவிட்டது.
இருள் சூழ்ந்துகிடந்த
எங்கள் எல்லைக்கு
ஒளி சுமந்துவந்த உயிரொன்று
அணைந்துவிட்டது.
பாசத்தோடு எங்களைப்
பேணிக்காத்த சிறகொன்று
பாரத வலை சிக்கி முறிந்துவிட்டது.
அந்நியதேசமெல்லாம் எங்களது
அவலங்களைச் சொல்லிநின்ற
இதயமொன்று அவிந்துவிட்டது.
செருமுனையில் நின்று
செந்தமிழின் பண்ணிசைத்த
சிட்டொன்று சிதைந்துவிட்டது.
எங்கள் இமயமொன்றை
இருள் விழுங்கிவிட்டது.
எங்கள் விழிமடல்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெல்லமுடியாதோரின் வஞ்சனையால்
கிழிந்துவிட்டன.
துணிச்சலையே துடுப்பாகக் கொண்டு
துன்பக்கடலை நீந்தி வென்றவனை
தீ தின்று விட்டதாம்.
எங்களின் உயிர்மூச்சே,
எவருக்கும் அஞ்சாத எரிமலையே,
தாயகமே திரண்டிங்கு
தாங்காது அழுகிறது.
போர்முனையில் உன்னைப்
பொசுக்க முடியாத தீ
பொறாமைகொண்டு உன்னைக்
கடல்நடுவே விழுங்கியதோ?
எங்கள் தளபதியே,
உன்னுடைய இழப்புக்காய் இன்று
வாய்விட்டு,
நெஞ்சுவெடிக்க அழுகின்றோம்.
ஆனாலும்... அழுகையினூடே
உறுதியெடுக்கின்றோம்.
உன்னை விழுங்கிய கடலைப் பார்த்து,
உன்னைத் தின்ற தீயைப் பார்த்து
நாங்கள் சொல்கின்றோம்-
"தலைநிமிர்ந்து நின்று
எங்கள் தன்மானத் தளபதி
கிட்டுமாமா காட்டிய வழியில்
தாய்மண்ணைக் காப்போம்!"

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வீரவணக்கம்

தளபதி கிட்டு அவர்களும், மற்றும் ஒன்பது போராளிகளும் இந்தியச் சதியில் சிக்கி வீரச்சாவடைந்ததன் பின், இந்தியாவைக் கண்டித்து லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் இந்த இரங்கற் பாடல் இசைக்கப்பட்டது. பின்னர் இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'தமிழன்' இதழில் 01.02.1993 அன்று இது பிரசுரிக்கப்பட்டது.

சிரித்து வரவேற்ற செந்தளித்த முகமெங்கே?
சிந்தித்து உரையாற்றிச் சிறப்புற்ற நாவெங்கே?
அணைத்துக் கரம்போட்டு... ஆதரித்த மனமெங்கே?
அன்னை தமிழ் வாழ வந்துதித்த மகனெங்கே?

ஈர்ப்புச் சக்தியென இழுத்திருந்த கண்ணெங்கே?
இதயத்தை ஊடுருவி எழுச்சி தந்த குரலெங்கே?
பார்ப்போரைப் பலப்படுத்திடும் பரிணாமத் தோற்றமெங்கே?
பாய்கின்ற கேள்விகட்குப் பதில் கூறும் புருவமெங்கே?

தேசப்படங்கீறித்... தேசியத்தின் வளங்கூறி...
மானப்பரம்பரையின் மறவர் உரங்கூறி...
மக்கள் பலங்கூறி... மனிதத்துவத்தின் நலன் கூறி...
பாடங்கள் பல சொல்லித் தந்த சுடரெங்கே?

தலைவன் புகழ் பாடி... அவன் தலைமைத் திறன் பாடி...
இலையிவன்போலோர்தலைவன்... இனியெமக்கேயெனக்கூறி
நிலையான தமிழீழம் தான் தலைவன் முடிவாகும்!

குலையாது இவன் திண்மை... கோடி துயர் வந்தாலும்!
வளையாது இவன் வரைந்த தன்மானப் பெருங்கோடு!
பலியானது பகையோடும் பலநூறு திட்டந்தான்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்றெமக்குத் தினம் கூறி எமை வளர்த்த உருவெங்கே?
குன்றனைய துணிவோடு நிமிர்ந்து நின்ற வடிவெங்கே?

சோராதீர் என்றெம்மைச் சுற்றிநின்ற கரமெங்கே?
சுதந்திரந்தான் முடிவென்று... சூளுரைத்த புலியெங்கே?
பாராளும் வேந்தருக்கும் பணியாத பலமெங்கே?
படை கூட்டி நாடாண்டு புகழ் சேர்த்த திருவெங்கே?
கூடப் பிறந்தெம்மைக் காட்டிக் கொடுப்போரை...
கோபித்தெழுந்து கொதித்து நாம் நிற்கையிலேயே...
"கோபிக்க வேண்டாம் நீர்! அவர் நாளை திருந்திடுவார்!
கொள்கை தெளிவுற்றுத் தமிழீழம் அடைந்திடுவார்!"

காதில் விழ்ந்த... பாழும் செய்தியாற்...
கதி கலங்கியே... தேகம் நடுங்கினோம்!
ஆழக்கடலில் இந்தியப் படையின்...
நாச வலையிற் சிக்குண்டாராம்!

எல்லை கடந்து எமன்போல் எதிர்கொண்டு...
கள்ளத் தனத்தாற் கைப்பற்ற முயன்றாராம்!

பகைவன் பிடியினிலே... சிக்குமுன்னே உயிர் போக்கி
மறையும் விதிக்கு விலக்காகிப் போகாமற்...
படகில் மரணித்துத் தீப்பிழம்பாய்ப் போனாராம்!
வெள்ளைச் சிரிப்பும்... விரி முகமும் சுடர் விழியும்
இல்லை இனியென்று எப்படி நாம் நம்பிடுவோம்!
சோதனைகள் தீயாகிச் சுட்டெரித்து நிற்கையிலே...
வேதனைகள் பாறையென மேல்விழுந்து அமுக்கையிலே...
பாதையிலே மேடுபள்ளம் பயணத்தைக் கெடுக்கையிலே...
தீது நின்ற பகைக்கூட்டம்... திசைக் கொன்றாய் முளைக்கையிலே...

ஏது வழியென்று மனம் தடுமாறிப் போகையிலே...
நீதி சொல்லி நெறிப்படுத்தி... நெஞ்சுக்கு உறுதி தந்து...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மோதி வெற்றி காண்போம்... முடிவு தமிழீழ மெனச்
சோதிப்பிழம்பாய் எம்முன்னே நின்றவனே!

முப்பத்து மூன்று வயதுனக்கு ஆனாலும்
உள்ளத்து முதிர்ச்சியிலே... உனக்கு நிகர் யாரிருப்பார்?
பெற்றவளுக்கேது சொல்வோம்?
புரிந்தவளுக்கேது சொல்வோம்?
சுற்றத்திருந்து வளர்த்தவருக்கு ஏது சொல்வோம்?

வெளிநாட்டில் நம்மவர்கள் இருக்கின்றார் எனநம்பி...
வழியனுப்பி வைத்த மக்களுக்கு என்ன சொல்வோம்!

பழிகூறி மொட்டைக் கடிதங்கள் தானெழுதி...
வெளிநாட்டு அரசுக்கு வெறியேற்றியதன் மூலம்...
பயங்கரவாதமென விடுதலைக்கு நாமமிட்டு...
வெளியனுப்பி வைத்த பாவியர்கள் நாங்களென
எண்ணித்துடிக்கும் எம்மவர்க்கு ஏது சொல்வோம்?
மண்ணள்ளித் தூவி யழுவோர்க்கு ஏது சொல்வோம்?

நாடாண்ட மன்னவனை... நலங்கொடுத்த நல்லவனை...
நாடோடியாக்கி நரபலியாய்க் கொடுத்துவிட்டோம்!
தேடிக் கிடைக்காத செல்வத்தைத் தொலைத்துவிட்டோம்!
தேடிவந்த தெய்வத்தைத் திருப்பி யனுப்பிவிட்டோம்!

கிட்டு என்ற பெயரோடு கிழக்கிருந்து வந்தவனே!
கட்டியணைத்தெம்மைக் கழுவி எடுத்தவனே!
சத்தியத்தின் தூதனெனக் கண்ணெதிரே நின்றவனே!

பகிர்ந்துண்டு களிக்கையிலே... பாலகனாய் வடிவெடுப்பாய்!
பசித்த முகம் கண்டால்... பதைத்து விருந்திடுவாய்!
தகுந்த முறை சொல்லித் தட்டிக் கொடுத்திடுவாய்!
தம்பியென்பாய்! அண்ணையென்பாய்! மச்சான் வா என்றிடுவாய்!
தங்கச்சி... அக்கா அம்மா வென்றன்போடு...

Tamileelam Archive

இங்கிதமாய் உறவாடி... உள்வீட்டு உறவானாய்!
எங்கள் இதயத்தில் உட்கார்ந்து நிலையானாய்!
ஓரிரண்டு ஆண்டினிலே... உயிர்த் தோழனாய் நீ!
சின்னக் குழந்தைகட்குச் சிறப்பு விருந்தினன் நீ!
கன்னத்திற் தட்டிக் கட்டியணைத்திடுவாய்!
கிட்டு மாமாவோ? கிட்டு மாமாவோ?
மொட்டாய் உதிர்ந்துவிட்ட கிட்டு மாமாவோ?
இரக்கத்தான் போனாலும் சிறக்கத்தான் போ என்பாய்!
துலக்கி மினுக்கித் துப்புரவாய் வாழென்பாய்!

உறைக்கக் கண்டிப்பாய்! உணர்ச்சி சுடக் கோபிப்பாய்!
அடுத்த கணத்திலே... அன்போடு கிண்டல் செய்வாய்!
மறைத்து பழக்கில்லை! மாசுந்தன் மனதில் இல்லை!
நினைத்துக் கூறி நண்பர்களை வளர்த்திட்டாய்!
கலையென்றால் உயிர் உனக்கு! கனித் தமிழில் நல்லார்வம்
கலைஞர்களை காண்பதிலே... மட்டற்ற சந்தோசம்!
அவர் வந்து காணுமுன்பே... நீ சென்று பார்த்திடுவாய்!
எதிரிகளின் பாசறைதான் என்றாலும் தமிழ்க் கலைகள்...
புதுமையுடன் பூத்திட்டால்... நீ சென்று பார்த்திடுவாய்!
பாடி மகிழ்ந்திடுவாய்! பரவசத்தில் கண்பனிப்பாய்!
கொள்கையிலே மாறுபட்டு நின்றாலும் அவர் கைகள்
குலுக்கியவர் படைப்பை வரவேற்று மகிழ்ந்திடுவாய்!

கலைஞர்களோடு கலைஞனென உட்கார்ந்து...
கலைவிழாக்கள் செய்து... தேசியத்தைக் காத்திட்டாய்!

எழுத்துலகில்... பேச்சுலகில் எத்தனையோ நண்பருண்டு!
பத்திரிகையுலகினிலும் பரிச்சயங்கள் உனக்கு உண்டு!

சமுதாயத் தொண்டர்களைச் சந்தித்து மகிழ்ந்திடுவாய்!
சமுதாயப் பணிகளுக்கும் சமபங்கைச் செய்திடுவாய்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழர் புனர்வாழ்வுச் சக்திகளை மெச்சிடுவாய்!
தமிழ்ச் சங்கமென்ன? எதிலும் நீ பங்கெடுப்பாய்!
சுக துக்கம் அறிந்து... சுற்றமென நின்றிருப்பாய்!
சக தமிழரெல்லாம் உறவென்று கொண்டிருப்பாய்!
கற்றவரும் மெய்சிலிர்க்கக் கேட்டிருந்து கல்லாவார்!
(நீ) கற்ற இடம் ஏதென்று புரியாது புல்லாவார்
உலக அரசியலை உற்று அவதானித்து...
வளரத் தமிழீழம்... வாய்ப்புக்கள் தேடிடுவாய்!
உலகத் தமிழர்கள் சமுதாயம் மேன்மையுறப்...
பலதும் அறியும் மாணவனாய்ப் பறந்திடுவாய்!
சுற்றியிருப்போரின் கெட்டித்தனமறிந்து...
புத்தி பல கேட்டுப் புதுவழிகள் புரிந்திடுவாய்!

இத்தனைக்கும் மேலாய் உலகத்தமிழர்களின்
ஒற்றுமையை நோக்கி உறுதி பல எடுத்திடுவாய்!
பாழ்பட்டுப் போனவர்கள் நாம் பறிகொடுத்து நிற்கின்றோம்!
ஊழ் வந்து கூடி... உனையெடுத்துச் சென்றதுவோ?

உன்னை மட்டுமா பலியெடுத்தார் பாவியர்கள்?
உன்னோடு ஒன்பதுபேர் ஒன்றாகப் போயினரே!
விடுதலையின் வித்துக்கள் நாளை எம்மண்ணை
ஆளும் தகுதி பெற்ற தாரகைகள் ஒன்பது பேர்
வீர மரணத்தைத் தழுவியது கொடுமையந்தோ?
கிட்டுவுடன் வளர்ந்து கிட்டுவுடன் படைசேர்ந்து
கிட்டுவுடன் சிறைக்குள்ளும் சென்று வந்த
குட்டிசிறி என்னும் இளவிளக்கும் பலியானான்.

எட்டுப்பேர் இன்னும் இருவரும் இளைத்தோரா?
வேலன், நாயகன், றொசான், ஜீவா, குணசீலன்
தூயவன், நல்லவன், அமுதன், என்ற நன்
முத்துக்கள் கடலுக்குள் சிதறி எரிந்தனரே!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முப்பத்து ஆறு மணித்துளிகள் நடுக்கடலில்...
சுற்றி நின்று வளைத்தார் சிறுமை கொண்ட இந்தியரே!

இத்தரணியறியாமல்... எல்லை கடந்து சென்று...
எத்தர்கள் உம்மை... ஏமாற்றத் துணிந்தனரோ!

'ஈழத்தில் கிட்டு' என்ற தலைப்பையல்லோ பார்த்திருந்தோம்
எங்கள் தலைவனை... இறுக அணைத்தபடி...
நின்று சிரிக்கும் புகைப்படத்தைப் பார்த்திருந்தோம்
யாழ்ப்பாணம் மட்டுநகர் திருமலையில் மன்னாரில்...
வன்னியிலே... ஊர்காவற்றுறையினிலே... உன்முழக்கம்
கேட்கும் நாளன்றோ... காத்திருந்தோம் ராசாவே!

நெஞ்சில் அடித்து நிலத்திற் புரண்டழவும்
அஞ்சிக் கிடக்கும் அந்நிய மண் வாழ்வினையே
தஞ்சமென நினைக்கும் தாழ்வுற்ற எமக்கெல்லாம்...
என்றுதான் நிம்மதியோ? ஆற இடமறியோமே!
எம் நெஞ்சில் என்றென்றும் ஒளிகொடுத்து நிற்குமையா!
ஓய்ந்துவிடமாட்டோம் நாம்! உன் பாதை வழி நடப்போம்!
வேங்கையரின் போர்க்குரலை... விண்வரையும்
கேட்கவைப்போம்!

சிங்களவரை யெதிர்த்தேயல்லோ... வேங்கையாய்
வடிவெடுத்தீர்
பொங்கும் தன்மானப் பொறிகளாய்... உருவெடுத்தீர்
சங்கெடுத்து வீரச்சமர் புரிய புறப்பட்டீர்
எங்கள் தமிழினத்தின் எதிர்கால வாழ்வுக்காய்...
உங்கள் உயிரோடு உறவுகளை அர்ப்பணித்தீர்!

பட்டுமெத்தைப் படுக்கை விட்டீர்! பாற்சோறு தானிழந்தீர்!
கொட்டுமழை... குளிர்... வெயில் அத்தனையும் தாங்கி நின்றீர்
பட்டப் படிப்பிழந்தீர் பதவி... பணம் தனை மறந்தீர்
எட்டுத் திசையெல்லாம்... எமக்காக நீர் பறந்தீர்

அம்மாவின் அன்பு அணைப்பைப் பிரிந்து சென்றீர்
அக்காவும் அண்ணாவும் தம்பியோடு தங்கச்சி...
தடுத்து மறித்தாலும்... தமிழீழ விடுதலைதான்...
தலையாய கடமையென்று தாவி வந்தீர் போராட

தியாகத்தின் உச்சியிலே... தீரத்தின் விளிம்பினிலே...
விவேகத்தின் வரப்பினிலே... விஞ்ஞானப்பரப்பினிலே...
புதிது புதிதாகப் படைத்திருந்தீர் போர்க்கருவி!
பகைவன் தடுமாறிப் பயந்தோடும் நிலை கண்டீர்
வகை வகையாய்த் தாக்குதல்கள்... நிலைகுலைந்தான் நம்பகைவன்

சிங்களர்தான் பகையென்றான் தமிழீழம் எப்பொழுதோ
எங்கள் விடுதலையின் எதிர்காலம்... எப்படியோ
பக்கத்திருந்தெம்மைப் படுகுழியிற் தள்ளவென்று...
துட்டர் அரசொன்று துடியாட்டம் போட்டதையோ!

யுத்தம் புரிந்து ஆற்றாமல் துரோகத்தால்...
வெற்றி பெறலாம் என நினைத்த... இந்தியமே!
ஏய்த்துக் குழிபறித்து... ஏமாற்றி எமையழிக்க
வாய்ப்புக்கள் பார்த்து... வந்தாரே இந்தியர்கள்

சத்தியத்தின் தந்தை காந்தி பிறந்த மண்ணில்
சதிகாரர் ஆட்சி புழுத்து நெளிந்ததையா
ஊழற்கொடுமை... லஞ்சத்தின் பேயாட்டம்
அத்தனையும் சேர்ந்து அரசாட்சி புரிந்ததையா!
தேசியத்தைக் காத்து... தம்மக்கள் விடுதலைக்காய்ப்
போராடும் மறவர்களைப் பசியாறத் துடிக்கின்ற...
நாச அரசியலின் நாடாமோ இந்திய மண்!
எங்கள் விடுதலையின் ஒப்பற்ற தியாகிகளை...
உண்டு பசியாறி ஏப்பமிட்டாய் இந்தியமே!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒன்றா இரண்டா... பத்தா ஒரு நூறா?
கொன்று குவித்துக் குதறி எறிந்தாய் நீ!

சிங்களத்தார் செய்த கொடுமையிலும் பன்மடங்கு...
இந்தியர்கள் அன்றோ எமக்கிழைத்துச் சென்றார்கள்!
இந்து சமுத்திரத்தின் எல்லைகளைத் தமதாக்கி
சொந்தங் கொண்டாடத் திட்டங்கள்தான் தீட்டி
வந்து புகுந்தார்! வழிப்பறிகள் கொலை கொள்ளை...
என்று பல புரிந்து எம்மினத்தை வதைத்திட்டார்!

குமரப்பா, புலேந்திரன், அப்துல்லா, ரகு, நளன்,
ஆனந்தக்குமார், மிரேஸ், அன்பழகன், றெஜினோல்ட்,
பழனி, கரனோடு தவக்குமார் என்ற
பன்னிரண்டு பேரை படகிலே பறிகொடுத்தோம்
உண்ணா விரதத்தை உலகுக்கு வெளிப்படுத்தி...
உரிமைப் போராட்ட வழிகண்ட உத்தமராம்
அண்ணல் மகான் காந்தி பிறந்தமண் இந்தியமண்!
எங்கள் திலீபன்... உயிர்கொடுத்து ஒளியானான்!
இந்த இந்தியா இருளிற் கிடந்தது!

ஜொனி என்ற வீரத் தியாகியையும் பறிகொடுத்தோம்.
இயக்கத்தின் வேர்கள் என இருந்த இவரையெல்லாம்
அரக்கத் தனங் கொண்ட இந்தியரே பறித்தெடுத்தார்

எத்தனைதான் நடந்தாலும்... எம் தாகம் தணியாது!
எங்கள் தமிழீழப் போராட்டம் தளராது!
சத்தியமோ சாகாது! தீயினிலும் வேகாது!
நித்தியமாய் நிலைத்திருக்கும்! நீதியென்னும் ஒளி பிறக்கும்!

தறிக்கத் தறிக்கத் தளிர்த்தெழுவோம்! இது உறுதி!
விழுத்த விழுத்த... விழுந்தெழுவோம்! இது உறுதி!
எரிக்க எரிக்க... மீண்டும் உயிர்பெறுவோம்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நெருக்க நெருக்க... நீண்டு வளர்ந்திடுவோம்!
உருக்க உருக்க... உலையிட்ட பொன்னாவோம்!
மறுக்க மறுக்க... மலையுடைக்கும் ஆறாவோம்!
ஒறுக்க ஒறுக்க... நிலம் பிளக்கும் கடலாவோம்!

உடல்கள் அழிந்தாலும் மாவீரர் தந்துசென்ற
திடமான தமிழீழக் கொள்கைகளோ அழியாது!
சொல்லால் உணர்வாற்... செயலால் எமக்குறுதி
உள்ளத்தில் விதைத்த... உத்தமர்கள் அவரன்றோ!

இந்தியமே! சிங்களமே! எமையழிக்க எண்ணாதீர்!
மூத்த வளர்ந்தகுடி! முச்சங்கம் கண்ட மொழி!
ஆர்த்து எழுந்த கலை! அகிலத்தின் ஆதிநிலை!
செந்தமிழின் மீதாணை! எந்தமிழர் மீதாணை!
எம்தலைவன் நெஞ்சத்தில் ஒரு தர்மம் வாழ்கிறது!
எம்தாகம் தமிழீழத் தாயகமே! இது உறுதி!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வீரம் - விவேகம்

இஸ்ரேலிய பாணியைச் சிங்களப்படைகள் அச்சொட்டாகக் கடைப் பிடித்த காலம் அது. தமிழ் இளைஞர்கள் மீதான சித்திர வதை வடிவங்களானாலும் சரி, படுகொலை முறைகளானாலும் சரி, தாக்குதல் நடவடிக்கைகளானாலும்சரி, எல்லாமே இஸ்ரேலிய உளவுநிறுவனமான 'மொசாட்'டின் ஆலோசனையின் பேரிலேயே நடாத்தப்பட்டன.

சுதுமலைத் தாக்குதலையும் அத்தகைய இஸ்ரேல் பாணியிலேயே சிங்களப் படைகள் நடாத்தின.

1985 ஆம் ஆண்டு, மார்கழி மாதம் 21 ஆம் திகதி காலை வேளை.

கிட்டண்ணை தங்கியிருந்த சுதுமலை முகாம் மீது, இராணுவத்தினர் ஒரு கொமாண்டோ அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.

மூன்று உலங்குவானூர்திகளின் துணையுடன் வான்வழிவந்த இராணுவத்தினர், இந்த அதிரடியை நிகழ்த்தினர்.

சுதுமலை முகாமிலிருந்து சிறிது தூரத்தில், திடீரென இரண்டு உலங்குவானூர்திகள் தரையிறங்கி இராணுவத்தினை இறக்கிவிட்டு மேலெழுந்தன. எல்லோரிடமும் நவீன ஆயுதங்கள் (ஏ. கே. ரக துப்பாக்கிகள், எல். எம். ஜி., ஆர். பி. ஜி., மோட்டார்கள்).

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தரையிறக்கப்பட்ட ஓரிரு நிமிடங்களில், முகாமுக்கு மிக அருகில் சண்டை தொடங்கியது.

எமது போராளிகளிடம் சாதாரண துப்பாக்கிகள் (எஸ். எம். ஜி., றிப்பீற்றர், 303 போன்றன) கிட்டண்ணையிடமிருந்து நம்பிக்கையூட்டக்




கூடிய விதத்திலும், தெளிவாகவும் உறுதியாகவும் கட்டளைகள் பிறக்கின்றன.

கிட்டண்ணையின் தலைமையில் சண்டை தீவிரமாக நடக்கின்றது. 'வோக்கி ரோக்கி' மூலம் அருகிலிருந்த முகாம்களை அழைத்து, அங்கிருந்தும் போராளிகளை வரவழைத்து, அவர்களைக் கொண்டு வேறு திசைகளிலிருந்தும் இராணுவத்தினரைத் தாக்குவிக்கின்றார்.

தன்னிடமிருந்த குறைந்த ஆயுதபலத்தைச் சரியான முறையில் பயன்படுத்துகின்றார். துணிவுடன் நின்று எதிரியை எதிர்கொள்கின்றார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிங்கள இராணுவம் நடாத்திய அன்றைய கொமாண்டோ தாக்குதல் வெற்றிபெறவில்லை. அத்தாக்குதல் முறியடிக்கப்பட்ட அதிர்ச்சியினால் - குழப்பத்தினால் - அச்சத்தினால் - அதேபாணியிலான அதிரடிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதில் இராணுவம் அக்கறை காட்டவில்லை.



தற்செயலாக அந்தக் கொமாண்டோத் தாக்குதல் வெற்றிபெற்றிருந் தால், வெற்றிக் களிப்பில் மீண்டும் மீண்டும் சிங்களப்படை பல இடங்களில் எமது நிலைகள் மீது பல தாக்குதல்களை நடாத்தியிருக்கும்; எமக்குச் சேதங்களையும் ஏற்படுத்தியிருக்கும்.

ஆனால் அப்படிப் பெரிதாக நடைபெறவில்லை. இதற்குப் பிரதான காரணம், அன்றைய எமது சுதுமலை முறியடிப்பில் கிட்டண்ணை கொடுத்த வீரம் மிகுந்த-விவேகம் நிறைந்த-தலைமைப் பாத்திரமே ஆகும்.

❑

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நினைவழியா நாட்களும் நெஞ்சில் மூண்ட நெருப்பும்

–புதுவை இரத்தினதுரை

அன்று;
எங்கும் இடிமுழங்கும்;
எறிகணைகள் கூவிவரும்;
எதிரி எம்மண்ணில் வர எத்தனிப்பான்;
என்றாலும் இங்கே பதட்டம் இருக்காது;
கடைகள் திறந்திருக்கும்;
கோயில் கொடியேற்றம் இனிதே நடந்தேறும்;
சின்னத்தங்கை பள்ளிக்குப் போவாள்;

இறக்கையில் பெரிய குண்டுகள் சுமந்து,
''இரும்புப்பறவை'' வட்டங்கள் போடும்;
கீழேவந்து ''எச்சங்கள்'' போட்டு,
கிளம்பிக்கொண்டு மீண்டும் போகும்.
என்றாலும் எம்மண் பயந்து நடுங்காது.
எங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடக்கும்;
''நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்''
காற்றில் இந்தக் கானம் கலக்கும்;
காத்தவராயன் கூத்துத் தொடங்கும்.

எல்லோருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை
''அவர்கள் விழித்திருப்பார்கள்.''
நம்பிக்கை என்றும்
பொய்யாகிப் போகாது.
வாகனத்திலேறி புலிகள் விரைவர்;
''கிட்டு'' தன்காரில்... தெருவைக்கிழித்து,
களத்துக்குப் போவதைக் கண்டு மகிழ்வர்.
சற்றுநேரத்தில் சத்தங்கள் ஓயும்;

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மரக்கிளைகட்டி உருவம் மறைத்த
"50 கலிபர்" பூட்டிய "பிக்கப்",
அங்கும், இங்கும் ஓடித்திரியும்.
"கிட்டு" அந்த "வானில்" நின்று,
தோள்கள் உதறச் சுடுவதைப் பார்க்கலாம்;
குண்டு சுமந்து வந்து மிரட்டிய,
இயந்திரக் கழுகு எங்கோ மறையும்,

இன்று,
"50 கலிபர்" அழுகிறது.
"கிட்டு எங்கே? கிட்டு எங்கே?
'இரு, இரு திரும்பி வருவேன்' என்று
என்னிடம் சொல்லிப் போனவன் எங்கே?
தளபதி திரும்பித் தாயகம் வருகையில்,
கடலில் மறித்த கைகளைக் காட்டு!"


கப்பலில் மேல் தளத்தில்...
நெடிய பனைபோல நிமிர்ந்து நின்று,
கடைசிமணித்துளி என்னடா நினைத்தாய்?
கப்பல் தகர்ந்து கனல் மூண்ட போது,
என்தோழனே! என்னடா நினைத்தாய்?
தாயை நினைத்தாயா? தாரத்தை நினைத்தாயா
தலைவன் முகத்தோடு,
தாயகத்தை நினைத்தாயா?

இதயமற்ற இரும்புச் சுடுகலன்,
எனக்கே விழிநீர் சொரியும் போது
நெஞ்சில் உன்னைச் சுமந்த தாயகம்;
நெருப்பாய் நிற்கும் உனது தோழர்;
உலகத்திசைகளில் வாழும் நண்பர்;
உன்னை வளர்த்த உயர்ந்த தலைவன்,
எப்படிப் பொறுத்து இருந்திடக் கூடும்?
உனது நினைவை நெஞ்சில் சுமந்து,
எமது பயணம் இனியும் தொடரும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# துணிவு - முயற்சி

1984 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரு காலைப் பொழுது. கிட்டண்ணை மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டு யாழ்-பருத்தித்துறை வீதி வழியாக அச்சுவேலி பஸ் நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். ஏதோ ஒரு வேலை காரணமாக வேறு இரு இளைஞர்களையும் ஏற்றிக்கொண்டு வந்திருந்தார். மோட்டார் சைக்கிளில் மொத்தம் மூவர், அந்தக்காலம் சிங்கள இராணுவம் குடாநாடெங்கும் தங்குதடையின்றி உலவிய காலம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அச்சுவேலி பஸ் நிலையத்தை அண்மிக்க முன் உள்ள வசாவிளான் வீதிச் சந்தியில் இராணுவத்தினர் நிற்பதைத் திடீரெனக் காண்கிறார். பின்னால் இருந்தவர்களைப் பதற்றமடையாமல் இருக்குமாறு கூறி விட்டுத் தொடர்ந்தும் மோட்டார் சைக்கிளை ஓட்டினார்.


ஆனாலும் இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளை மறித்துவிட்டனர். ஏதோ கூறித் தப்பிக்க முயல்கின்றனர். இதற்கிடையில் கிட்டண்ணையின் சட்டைப் பையில் இருந்த சயனைட் குப்பியை இராணுவத்தினர் கண்டுவிட்டனர். அந்தக் காலத்தில் எமது சயனைட் குப்பி பற்றி எதிரிக்கு எதுவும் தெரியாது. அந்தக் குப்பி என்னவென்று கிட்டண்ணையிடம் விசாரிக்கின்றனர்.

தொய்வு நோய்க்குப் பயன்படுத்தப்படும் மருந்து எனக்கூறித் தப்பிக்க முயல்கிறார். ஆனாலும் விசாரித்துவிட்டு விடுவதாகக் கூறி, பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மற்றைய இரு இளைஞர்களுள் ஒருவரை இராணுவ 'ட்றக்'கில் ஏற்றிவிட்டு, கிட்டண்ணையை மற்றவருடன் மோட்டார் சைக்கிளில் வரும்படி பணித்துவிட்டு, பலாலி இராணுவ முகாம் நோக்கிச் செல்கின்றனர்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வாகன அணிகளுக்கு நடுவே மோட்டார் சைக்கிள் சென்றுகொண் டிருக்கிறது.


அச்சுவேலி-வசாவிளான் பாதையில், 'மக்கோண' என அழைக்கப் படும் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்குச் செல்லும் ஒழுங்கைக்கு அருகில், வாகன அணி செல்கின்றது.

தப்பியோடுவதற்குச் சந்தர்ப்பமும் இடமும் இதுதான் எனக் கிட்டண்ணை முடிவெடுக்கிறார்.

திடீரென அந்த ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிளைத் திருப்பி, வேகத்தை அதிகரிக்கின்றார்.

அதிர்ச்சியடைந்த இராணுவத்தினர் வாகனங்களை நிறுத்திச் சுட எத்தனிக்கும் முன், மோட்டார் சைக்கிள் சுமார் 50 யார் தூரம் சென்று விடுகிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



துரதிட்டவசமாக, ஒழுங்கை வேலியில் கட்டப்பட்டபடி ஒழுங்கையின் எதிர்ப்பக்கத்தில் நின்று மேய்ந்துகொண்டிருந்த மாட்டின் கயிற்றில் சிக்கி, மோட்டார் சைக்கிளுடன் கிட்டண்ணை வீழ்ந்துவிட்டார்.

அருகில் சிறு பற்றைகளும் அப்பால் வாழைத்தோட்டங்களும் இருந்தன. சில வினாடிகளில் மோட்டார் சைக்கிள் வீழ்ந்து கிடந்த இடத்துக்கு விரைந்துவந்த கவசவண்டி, ரவைகளைப் பொழிந்து தள்ளியது. அருகிலிருந்த வாழைகள் ரவைகள் பட்டு முறிந்து வீழ்ந்தன.

ஆயினும், கிட்டண்ணை தப்பியோடிவிட்டார்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# "கால்களை இழக்கலாம், கண்ணை இழக்கலாம் தன்னை இழக்கினும், தாயகம் இழக்கிலோம்"

- புவி

விடுதலை நெருப்பாய் கனன்ற வீரனே!
விடிவை நோக்கியே விரைந்த பறவையே!
விழிகள் மீதிலோர் நதியினைத்தந்தாய்
வீழ்ந்து கதறுமோர் நிலையினைத்தந்தாய்.

கயவர் படைதனை கலக்கியடித்ததும்,
களத்திலாடியே கருவிகள் மீட்டதும்,
கோட்டையை மறித்தோர் அரணாய் நின்றதும்,
நேற்றுப்போலவே நெஞ்சினில் உள்ளது.

காலை இழந்தும் நீ காவலிருந்தாய்!
கண்துயிலாது களத்தில் திரிந்தாய்!
''கால்களை இழக்கலாம், கண்ணை இழக்கலாம்
தன்னை இழக்கினும், தாயகம் இழக்கிலோம்''

சத்தியம் செய்தாய்; சங்கென ஆர்த்தாய்!
சண்டைக்களங்களில் சாதனை புரிந்தாய்!
தாயக மீட்பே குறியெனக் கொண்டாய்!
தன்னையே இன்று தற்கொடை ஈந்தாய்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



இங்கிவர் மேலும் தாக்குதல் புரியலாம்;
இந்தியா இன்னும் சூழ்ச்சிகள் செய்யலாம்;
இன்னுமோர் பெரும்படை எதிர்வந்து நிற்கலாம்;
எங்கும் பிணங்களாய் எரிந்து கருகலாம்.

கண்போல் நீங்கள் காத்த மண்ணிது!
சிந்துகுருதியால் சேர்த்த நிலமிது!
உங்கள் உறுதியை உயிரினில் சுமந்தோம்!
பொங்கும் விடுதலைப் போரிலே வெல்வோம்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# கிட்டு எனும் ஓவியர்

- திலகர்

கிட்டு ஓர் ஓவியக் கலைஞனாகவும் வளர்ந்துவந்தார். பிரிட்டிஸ் அரசாங்கம் அவரைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றிய போது, அவர் மறைவாகப் பல நாடுகளில் இருந்த காலம், அவரது கலை உணர்வுகளுக்கு உரம் ஊட்டும் சந்தர்ப்பத்தை அளித்தது எனலாம். கலைச்செயற்பாடுகளில் ஈடுபட அக்காலம் அவருக்கு ஓரளவு ஓய்வு கொடுத்திருக்கலாம். இயற்கையாக மிக நுணுக்கமான உணர்வுத்தன்மை உடையவர் என்பதை அவருடன் நெருங்குவோர் உடனே புரிந்து கொள்வர். இயற்கையின் அழகை ரசிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இசையில் ஆழமான ரசனை உடையவர். புகைப்படக் கலையில், ஒரு விற்பன்னனைப் போல் செயல்படும் திறனும், அது குறித்த அறிவும் பெற்றிருந்தார். மேலும் நூல்கள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வடிவமைப்பதில் அவருக்கிருந்த கலாரசனை, வாசகர்களின்

Tamileelam Archive

மனோவியல் பற்றிய அறிவு, நிறத்தெரிவு ஆகியவை அவரின் தனித் தன்மையான அம்சங்கள். இத்தகைய மனத்தளத்திலேயே அவரது ஓவியக் கோபுரம் கட்டி வளர்க்கப்பட்டுவந்தது.



மெக்சிக்கோ நாட்டு ஓவியர் ஒருவரிடம் சிறிதுகாலம் முறையாக ஓவியக் கலையைப் பயின்றார். அவ்வோவியனின் பாதிப்பு இவரது ஓவியங்களில் இருந்ததாக எண்ணுகின்றேன். கிட்டு இந்தியாவில் இருந்தபோது, சாளி என்ற இளம் ஓவியனுக்கு ஓர் ஓவிய அறையை ஒதுக்கி ஊக்கப்படுத்திவந்தார். நான் சென்னை சென்றபோது, சாளியை ஓவியர் சந்தானத்திடம் அறிமுகம் செய்து, பயிலுமாறு செய்தேன். அக்காலத்தில் கிட்டு நவீன ஓவியம் குறித்துக் கருத்து முரண்பட்டவராக இருந்தார். ஆனால் ஐரோப்பாவில் இருந்த காலத்தில், பிக்காசோவின் ஓவியங்கள் மீது காதலே கொள்ள ஆரம்பித்தார். 'சவ அறை' என்ற

பிக்காசோவின் ஓவியத்தின் சாயல் அவரது ஓவியம் ஒன்றில் படிவதாக உணர்ந்தேன். தனது ஓவியங்களில் ஆழ்ந்த உணர்வுகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும், அவ்வெளிப்பாட்டிற்கு குறியீடுகளைக் கையாள்வதிலும், தனது கற்பனைகளை உயர உயரப் பறக்கவிட்டுள்ளார் என்றே கூறுதல் வேண்டும். ஒரு சித்திரம், ஒரு விடுதலை வீரனின் மரணம் ஏராளம் வித்துக்களைப் பிரசவிப்பதாக அமைந்துள்ளது. வித்துக்களிலும் அவற்றிலிருந்து உயிர்ப்பெடுக்கும் பல்வேறு வகை மரஞ்செடி கொடிகளிலும் அவர் ஆறாத அன்பு கொண்டிருந்தார். அவை அங்கு தனது நாட்டில் பரப்பப்படவேண்டும் என்பதிலும் ஆர்வமாய் இருந்தார். சில ஓவியங்கள் மரபு ரீதியாகவும், யதார்த்தமாகவும் அமைந்துள்ளன. ஆயினும் அவற்றிலும் சில அம்சங்களில் பண்புத் தன்மையை (Abstract) கலந்துள்ளார். 'வான்கோ'வின் தாக்கத்தை, ஒரு சில ஓவியங்களில் காணலாம். தனது கருத்தை ஓவியத்தின் மூலம் தீவிரமாக வெளிப்படுத்துதல் என்பதோடு, அதற்கு மேலதிக அழுத்தம் கொடுப்பதாக, தீவிர நிறச் சேர்க்கையையும் தூரிகை வீச்சையும் கையாள முயன்றுள்ளார். நிறப் பொருத்தம் என்ற விடயத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார். ஆனால் நிறங்களைக் கையாளும் விடயத்தில் அனுபவக் குறைவு காரணமாக, நிற அழுக்கு ஏற்படுவதாக விமர்சனத்துக்கும் உட்பட்டுள்ளார். நிறக் கலவைகளைப் பயன்படுத்துவதில் நீர், எண்ணெய் நிறங்களை விட அக்கிறிலிக் என்ற நிறக்கலவையையே பெரிதும் பயன்படுத்திவந்தார். அதன்மீது மினுக்க எண்ணெய்யைத் தடவிவிடுவார். உடல் உறுப்புக்களை (Anatomy) அதன் அசைவுகளை நுணுக்கமாக வரைதல் என்ற விடயத்தில், இன்னும் ஏராளம் படிக்கவேண்டியிருந்தது. ஆயினும், ஒருமுறை என்னுடன் தொலைபேசியில் பேசும்போது வேடிக்கையாக அவர் கேட்டார், "இனிமேல் என்னை ஓவியர் கிட்டு என்று அழைக்கலாமோ?" என்று. "நிச்சயமாக" என்று தெரிவித்தேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வரலாற்றுப் பதிவில்

– நாக. பத்மநாதன்.

"வரலாறே உன் பதிவுகளைப் பார்க்கலாமா?" என்றேன்.

"நீ யார்?"

"நடந்ததை அறிய விரும்புபவன்" என்றேன்.

"அது போதாது!" எனச் சிரித்தது வரலாறு.

"விடுதலை மண்ணில்..." எனக் கூறி முடிக்குமுன்– "அப்படிச் சொல்!" என்ற பலத்த ஒலி கேட்டது.

கட்டடம் ஒன்று தெரிந்தது.

அது கண்முன் நின்றது. அதன் கதவுகள் திறந்தன. அது தொல் பொருட் கூடமா? நிறைந்த நூல்நிலையமா? இல்லை, காலத்தைக் காட்டி நின்ற களஞ்சியப் பெருங்காட்சியகமா?

கண்ணைப் பளிச்சிடும் கருத்து வரிகளும், கவின்கொள் ஓவியங் களும், எட்டிய தூரமெல்லாம் நூல்களும், இன்னும் பல புது சாதன விளக் கங்களும் தெரிந்தன. வளைவுகள், பிரிவுகள் என அவை விரிந்து கொண்டிருந்தன!

***சுவரில் ஒரு பெரும் நாட்காட்டி அன்றைய தேதியை– 22ஆம் நூற்றாண்டை– காட்டி நின்றது! ஆம், அது 22 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.***

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யான் இறந்த 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி நினைவுக்கு வந்தது. இது இங்கு பெரிதல்ல! அசுர அழிவுகளின் நடுவே விடுதலையின் விடிவைக்காட்டி அதற்கு ஒளியான இன்னுயிர்கள், அங்கு அனலாக நின்ற நெஞ்சங்கள், மனத்துள் உயிர்த்தன.

அதன் பின் எழுந்த நிகழ்வுகள் எதுவெதுவோ? பதைப்புற்ற உணர்வோடு பார்த்தேன். எதிரே காணக்கிடைத்த காட்சியில் - பருத்த பல நூல்கள் இப்போ தூசி படிந்து ஒரு புறம் அடுக்கிக் கிடந்தன!

''அவை அழிந்தொழிந்த ஏகாதிபத்திய நாடுகளின் கதை; அதைத் தொடர்ந்து சிதறுண்ட உலக வல்லரசுகளின் கதை'' என்ற ஏளனப் பரிவுடன் குரலொன்று விளக்கிற்று!

''அவை அழிந்த விதம்?''

பதில் போலப் பெரிய பூகோளப் படமொன்று எதிர்ச் சுவரிற் தெரிந்தது. அங்கு சிதைந்து. மங்கிய சில எழுத்தின் மேல் புதிய ஒளிக்கதிர்கள் மின்னின!

''இவை விடுதலை நாடுகள் - விடுதலையை வருவித்த நாடுகள்! பயந்தவை மாண்டதும், துணிந்து தொடர்ந்து எழுந்தவை வாழ்ந்ததும் உலக வரலாறு! அழிக்க வருவதை அழிப்பதே அறம்!''

இக்குரலைக் கேட்டபடி உள்ளம் சிலிர்க்க, இதயம் ஆர்ப்பரிக்க, இன்னொரு கூடம் தந்த காட்சியுள் நின்றேன்! அங்கும் இசை வரிகள் முரசொலித்தன!

''நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்தீர், நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்!''

ஆம், இவை எம் ஈழத்தின் வரிகள்! எதிர் முன் தெரிவதும் சுதந்திரத் தமிழீழத் தாயகத்தின் திடன் உரைக்கும் வரைபடம்! இவ்வேளை -

மீண்டும் இலத்திரனியல் காட்சிகள் எழுந்தன. அவை வரலாற்றுத் தொடர்கள்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அங்கு ஆணவ அடக்குமுறையின் - கொடூர இன ஒழிப்பின் கரங்கள் தெரிந்தன.

நீதியை நெரித்தெழுந்த அரசியற் சட்டங்கள், மருந்துவகையிலும் கூடத் தடைகள், படையின் அக்கிரமங்கள், படுகொலைகள், நில ஆக்கிரமிப்புக்கள், விமானம் பொழிந்த தீச்சுவாலைகள் - இவ்வளவையும் எதிர்த்து நிற்கிறது -

மக்களின் மன உறுதி; பழகிவிட்ட அஞ்சாமை உணர்வு - அந்த உறுதிக்கு உயிரூட்டி நிற்கும் தலைமை!

"***உயிர் நீப்பர் மானம் வரின்*** - தன்மானத்திற்குக் கேடு வரின்" - என்ற பொய்யா மொழியை மெய்ப்பித்த புதிய தலைமுறை எழுந்த காலம்! கையிலே ஆயுதமும் கழுத்திலே 'சயினைட்டும்' அணிந்திருந்த களம்!

அதன் காட்சிகள் சில மேலும் மீட்டப்படுகின்றன!

இதோ -

சிவகுமார், சங்கர் -

மாதோட்டத்திலே சிங்களப்படையினரைக் களமாடிக் கைதாக்கிய மாவீரன் விக்ரர் -

இந்திய - சிங்கள ஆணவப் பரிமாறலுக்குப் படுதோல்வி புகட்டிய புலேந்திரன், குமரப்பா குழுவினர் -

ஆயுத ஆய்விலே உயிர்நீத்த பொன்னம்மான் போன்ற செம்மல்கள் -

கரும்புலிகள் மில்லர், போர்க் -

கடற்புலிகள் கொலின்ஸ், காந்தரூபன், வினோத் -

மேஜர் சோதியா, லெப். அனிதா ஆகிய காவிய வரிசைகள் -

தமிழீழ விடுதலைக் குரலைத் தாயகத்தைக் கடந்தும் ஒலிக்கவைத்த விறல்நிறை திலகங்கள் -

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்திய அநீதியை எடுத்துரைக்கத் தம்மை ஆகுதியாக்கிய தியாகி திலீபன், அன்னை பூபதி -

சமாதானத் தூதுவனாய் வந்து இந்தியச் சதிக்குச் சரணடைய மறுத்து - விடுதலைப்புலிகளின் மரபை ஆழ் கடலிலே பதித்த உலகறிந்த தளபதி கிட்டுவும் மற்றும் ஒன்பது வீரவேங்கைகளும் -

இவ்வித இன்னுயிர்ப் பரம்பரையில் உள்ளோர் ஒன்றிரண்டல்ல, ஆயிரமாயிரம்! இவை வரலாற்றுப் பதிவேட்டின் அழியாத பதிவுகள்! இவ்வேளை -

வெளியிலோர் பரபரப்பு: அது யாதென வினவுமுன் அந்த முனைப்பில் நின்றேன்.

அது ஒரு சர்வதேச ஆய்வுக்குழு. அவர்களுள் சிலர் ஆர்வத்துடன் புலிச்சின்னத்தைத் தம் அங்கியில் அணிந்திருந்தனர். அவர்கள் தளபதி கிட்டு தமது படகினைத் தகர்த்துச் சங்கமமாகிய ஆழ்கடலின் அடியினை ஆய்வுசெய்யப் புறப்படுகின்றனராம்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive